# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு மின்ஊழியர் மத்திய அமைப்பின் மாதஇதழ்
CENTRAL ORGANISATION OF TAMILNADU ELECTRICITY EMPLOYEES MONTHLY ISSUE

கதிர் 8
செய்தி 4
அக்டோபர் 2021
விலை ரு 10/-


தோழர்
## எஸ்.பஞ்சரத்னம்

தொழிற்சங்க அரங்கில்
மத்தியஅமைப்பில்

எளிமையாய்...
வலிமையாய்...
தலைமையாய்...



## வீரவணக்கம்

# தோழர் பஞ்சரத்தினம் அவர்களின் மாநாடு – போராட்டங்களின் பங்கேற்பு நினைவுகள்









# மின்கதிர் செய்தி

தமிழ்நாடு
மின்ஊழியர் மத்திய
அமைப்பின்
மாத இதழ்

**விலை ரூ. 10/-**

**அக்டோபர் 2021**

**உள்ளே....**


- ★ மத்திய அமைப்பின் முன்னணி தலைவர் எஸ்.பி.ஆர். மறைவு
- ★ ஒரு சகாப்தத்தின் அந்திமம்
- ★ ஆட்சி மாறினாலும் என்றுதான் காட்சி மாறுமோ என்ற ஏக்கத்தில் மின்ஊழியர்கள்
- ★ தனியார்மயம் பங்கு விற்பனை பணமாக்கல் எதிர்த்து சிறப்பு மாநாடு
- ★ விண்டுறைக்க மாட்டாத விந்தை பாரதி
- ★ மாற்றத்திற்கான நம்பிக்கை விதைகள் நம்மிடம்...
- ★ சீறும் சிறுத்தையாய் கம்யூனிசம்....
- ★ மாற்றத்தை நம்மிடமிருந்து துவங்குவோம்...


**ஆண்டு சந்தா ரூ. 100/-**
**ஆயுள் சந்தா ரூ. 1000/-**
**தனிப்பிரதி ரூ. 10/-**

**ஆசிரியர் குழு**
எஸ். இராஜேந்திரன்
டி. ஜெய்சங்கர்
எம். வெங்கடேசன்
வி. இளங்கோ
கே. ரவிச்சந்திரன்
எம். தனலட்சுமி

முகவரி
எண் 27, மசூதி தெரு,
சேப்பாக்கம், சென்னை 600 005.



# மின் ஊழியர் மத்திய அமைப்பின் மூத்த முன்னால் தலைவர் தோழர் எஸ்.பஞ்சரத்னம் மறைவு!

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் (சிஐடியு) மூத்த முன்னாள் தலைவர்களில் ஒருவரான தோழர் எஸ். பஞ்சரத்னம் உடல் நலக்குறைவால் 22.09.2021 அன்று காலை 9.35 மணிக்கு கோவையில் காலமானார். அவருக்கு வயது 82. **தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) உருவானதில் முக்கியப் பங்கு வகித்தவர் தோழர் எஸ்.பஞ்சரத்னம்.** மின்வாரியத்தில் பணி யாற்றி வந்த சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த ஊழியர்கள் மற்றும் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பணியாளர்களின் சட்ட, சமூகப் பாதுகாப்பை பெற்றுத் தந்தவர். மின் ஊழியர்களின் ஆதர்சநாயகனாக விளங்கிய தோழர் எஸ்.பஞ்சரத்தினம் தனது இறுதிகாலத்தில் கோவை சாய்பாபா காலனியில் வசித்து வந்தார். இந்நிலையில் வயது மூப்பு மற்றும் உடல்நலக்குறைவின் காரணமாக புதன்கிழமையன்று கோவையில் அவரது இல்லத்தில் காலமானார். அவரது மறைவு செய்தி அறிந்து மார்க்சிஸ்ட் கட்சியின் கோவை நாடாளு மன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், கோவை மாவட்ட செயலாளர் வி.இராம மூர்த்தி, மாநிலக்குழு உறுப்பினர் சி.பத்மநாபன், மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் எஸ்.ராஜேந்திரன், மண்டல செயலாளர் வி.மதுசூதனன், மாநில துணை தலைவர் கோபாலகிருஷ்ணன், மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் தலைவர் சின்னசாமி ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். தோழர் எஸ்.பஞ்சரத்னம் அவர்களின் இணையர் இந்திராணி, மகன் சண்முகம், மகள் விஜயலட்சுமி உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர். மேலும், மத்திய அமைப்பின் முன்னாள் தலைவர் தோழர் எஸ்.எஸ்.சுப்ரமணியம், சிஐடியு மாநில பொதுச் செயலாளர் தோழர் சுகுமாறன், உதவிப் பொதுச்செயலாளர் திருச்செல்வன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாநில செயற்குழு உறுப்பினருமான தோழர் லாசர் அவர்களும் அஞ்சலி செலுத்தினார்கள். தோழர் பஞ்சரத்னம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மின் ஊழியர் அமைப்பின் நிர்வாகிகள், மார்க்சிஸ்ட் கட்சியின் ஊழியர்கள் திரண்டு வந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

மறுநாள் 23.09.2021 அன்று கோவை பாப்பநாயக்கன் பாளையம் மின்மயானத்தில் தோழரது உடல் தகனம் செய்யப்பட்டது.




# மத்திய அமைப்பின் மகத்தான தலைவர் தோழர் எஸ்.பி.ஆர். நம்மை விட்டு பிரிந்தார்...

தோழர்களே!

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பில் தன்னை இணைத்துக் கொண்டு ஒப்பந்த ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றி மத்திய அமைப்பை மின்சார வாரியத்தில் மின் ஊழியர்கள் மத்தியில் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்க வைத்த மத்திய அமைப்பின் பொதுச் செயலாளராக, தலைவராக பணியாற்றினார். அருமைத் தோழர் எஸ். பஞ்சரத்னம் அவர்கள் 22.09.2021 காலை 9.35 மணியளவில் உடல்நலக்குறைவால் காலமானார் என்ற செய்தி நமக்கெல்லாம் மிகப்பெரிய ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தி உள்ளது.

2009-ல் தஞ்சை மாநில மாநாட்டில் தன் உடல் நிலையை கருத்தில் கொண்டு அனைத்துப் பொறுப்புக்களிலிருந்தும் தன்னை விடுவித்து தனது சொந்த ஊரான திருநெல்வேலி மாவட்டத்திற்கு சென்றதோடு இன்று வரை மத்திய அமைப்பின் அனைத்து வழிகாட்டுதலையும் ஆலோசனைகளையும் வழங்கினார். 2017-ல் குடும்பச்சூழல் காரணமாக கோவையில் குடிபுகுந்தார். அவரது மூத்த மகன் ப.சீனிவாசன் உடல்நல குறைவால் 2019 ஆம் ஆண்டு காலமானதிலிருந்து அவர் மனதளவில் பாதிக்கப்பட்டார்.

கோவை தோழர்கள் தோழர் எஸ்.பி. ஆர். அவர்களுக்கு வேண்டிய உதவிகளையும், வசதிகளையும் செய்து கொடுத்தனர். கடந்த 13-ந்தேதி காலையில் கட்டிலில் இருந்து எழுந்திருக்கும் போது கீழே விழுந்த காரணத்தால் அவருக்கு தலையில் அடிபட்டிருந்தது. சுமார் 11 மணி அளவில் வாந்தி எடுத்தார். தோழர் எஸ்.பி.ஆரின் இளைய மகன் திரு. ப.சண்முகம் மத்திய அமைப்பின் பொதுச் செயலாளரை தொடர்பு கொண்டு மேற்கண்ட செய்திகளை தெரிவித்ததின் அடிப்படையில் கோவையில் தோழர் எஸ்.பி. ஆர் வீட்டிற்கு அருகில் உள்ள " ONECARE " மருத்துவமனையில் அனுமதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 14.09.2021 அன்று நிர்வாகிகள் கூட்டம் முடிந்தவுடன் பொதுச் செயலாளர் தோழர் எஸ்.இராஜேந்திரன் கோவைக்கு சென்று தோழர் எஸ்.பி.ஆர். அவர்களின் உடல் நிலை குறித்து மருத்துவரிடம் கலந்து பேசியும், மாநில நிர்வாகிகள் தோழர் வி.மதுசூதனன், டி.கோபாலகிருஷ்ணன் மற்றும் கோவைக்கிளை நிர்வாகிகளுடன் உதவிகளை செய்தார்.

19.09.2021 அன்று மருத்துவர்கள் கூறிய தன் அடிப்படையில் எஸ்.பி.ஆரின் உடல் உயர்தர மருத்துவ சிகிச்சைகளை ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் கனத்த இதயத்தோடு எஸ்.பி.ஆரை வீட்டிற்கு அழைத்து வந்தோம். தமிழகம் முழுவதும் நமது தோழர்கள், மாநில நிர்வாகிகள் மற்றும் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் க.கனகராஜ், மாநிலக்குழு உறுப்பினரும், கோவை

மாவட்ட சிஐடியு தலைவருமான தோழர் சி.பத்மநாபன், நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் பி.ஆர். நடராஜன் மத்திய அமைப்பின் முன்னாள் தலைவர் தோழர் எஸ்.எஸ்.சுப்ரமணியன், எம்ப்ளாயீஸ் பெடரேசன் பொதுச்செயலாளர் தோழர் சேக்கிழார், பொருளார் பாஸ்டீன்ராஜ், அதே போல மத்திய அமைப்பின் முன்னாள் தலைவர்கள் தோழர் பி. தியாகராஜன், டி.குமாரவேலு உள்ளிட்ட தலைவர்கள் நேரில் வந்து நலம் விசாரித்தனர். மாநில நிர்வாகிகள் தோழர்கள் எஸ். வண்ணமுத்து, எஸ்.அப்பாதுரை, எஸ். ஜோதிமணி, வி. சந்திரன், பீர்முகதுஷா, ஆர். ரவிக்குமார், எம்.தயாளன், மற்றும் மாநில தலைவர் தோழர் தி.ஜெயசங்கர், மாநில பொருளாளர் எம்.வெங்கடேசன், துணைப்பொதுச்செயலாளர்கள் தோழர்கள் கே.ரவிச்சந்திரன், கே.அருள்செல்வன், மற்றும் கிளைச்செயலாளர்கள் தோழர்கள் எஸ். கண்ணன் (மத்திய சென்னை), சத்தியமூர்த்தி (சென்னை வடக்கு), கணபதி சுரேஷ் (தூத்துக்குடி அனல்), கந்தசாமி(நெல்லை), குந்தா முரளிதரன், பொறியாளர் குழுமத்தின் நிர்வாகிகளில் ஒருவரான எஸ்.அனந்தநாராயணன் மற்றும் சென்னை வடக்கு, மத்திய சென்னை தோழர்கள் நேரில் வந்து தோழர் எஸ்.பி.ஆரின் குடும்பத்தினரிடம் நலம் விசாரித்தனர்.

**இருப்பினும் 22.09.2001 அன்று காலை 9.35 மணியளவில் தோழர் எஸ்.பி.ஆர். நம்மை விட்டு பிரிந்தார்.**

தோழர் எஸ்.பி.ஆரின் மறைவுச் செய்தியை அறிந்து மார்க்சிஸ்ட் கட்சியின் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஆர்.நடராஜன், கோவை மாவட்ட செயலாளர் வி.இராமமூர்த்தி, மாநிலக்குழு உறுப்பினர் சி.பத்மநாபன், மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் எஸ். ராஜேந்திரன், மண்டல செயலாளர் வி.மதுசூதனன், மாநில துணை தலைவர் கோபாலகிருஷ்ணன், மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் தலைவர் சின்னசாமி ஆகியோர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். தோழர் எஸ்.பஞ்சரத்னம் அவர்களின் இணையர் இந்திராணி, மகன் சண்முகம், மகள் விஜயலட்சுமி உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர். மேலும், மத்திய அமைப்பின் முன்னாள் தலைவர் தோழர் எஸ்.எஸ்.சுப்ரமணியம், சிஐடியு மாநில பொதுச் செயலாளர் தோழர் ஜி. சுகுமாறன், உதவிப் பொதுச்செயலாளர் திருச்செல்வன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் மாநில செயற்குழு உறுப்பினருமான தோழர் லாசர் அவர்களும் அஞ்சலி செலுத்தினார்கள் .

தோழர் பஞ்சரத்னம் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மின் ஊழியர் அமைப்பின் நிர்வாகிகள், மார்க்சிஸ்ட் கட்சியின் ஊழியர்கள் திரண்டு வந்து நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர். கோவைக் கிளைகளின் நிர்வாகிகள் தோழர்கள் மணிகண்டன் ( கோவை மாநகர்), சாதிக்பாட்ஷா, காளிமுத்து, பாலகிருஷ்ணன், கோவை வடக்கிலிருந்து தோழர்கள் மணிகண்டன், சென்னியப்பன், கலைச்செல்வி, சின்னத்தாய், ஜோசப்குமார், கோபால், கோவை தெற்கிலிருந்து தோழர்கள் காளிமுத்து, ரத்தினகுமார், பத்மநாபன், பல்லடம் கிளையிலிருந்த ராமலிங்கம், திருப்பூரிலிருந்து நாகராஜ், சண்முகம்(ஊட்டி), கிருஷ்ணகுமார் (உடுமலை), சுகுமார் (காடம்பாறை), மத்திய அமைப்பின் துணைப் பொதுச் செயலாளர் தோழர் வி.இளங்கோ, பொறியாளர் அமைப்பின் நிர்வாகி குமரேச பாண்டியன்(மேட்டூர்), கருப்பண்ணன் (சேலம்), மாநில செயலாளர் ஜோதிமணி, மேட்டூரிலிருந்து தோழர்கள் செல்வகணபதி, சண்முகம், கோவிந்தராஜ்(நாமக்கல்) பாண்டியன்(கோபி) உள்ளிட்ட தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

நெல்லை மண்டத்திலிருந்து தோழர்கள் எஸ். வண்ணமுத்து, குன்னிமலையான் (தூத்துக்குடி), சந்திரன்(நெல்லை உற்பத்தி), மோகன்தாஸ் (கன்னியாகுமரி), உள்ளிட்ட தோழர்களும் மதுரையிலிருந்து தோழர் ஜீவானந்தம்- தலைவர் TNPEO, உமாபதி (திண்டுக்கல்), மாநில செயலாளர் தோழர் உமாநாத், கிளைச்செயலாளர் கருணாநிதி (சிவகங்கை), ஆகியோரும் திருச்சி மண்டலத்தில் மாநில நிர்வாகிகள் தோழர்கள் எஸ். ரங்கராஜன், அகஸ்டின், ராஜாராமன், முன்னாள் மாநில நிர்வாகி தோழர் பன்னீர் செல்வம், மற்றும் ராஜகுமாரன் ஆகியோருடன் பன்னீர் செல்வம்(பெரம்பலூர்), செல்வராஜ் (திருச்சி), தனபால்(கரூர்) உள்ளிட்ட தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

வேலூர் மண்டலத்திலிருந்து தோழர்கள் மாநில நிர்வாகிகள் தோழர்கள் ஜீவா(தர்மபுரி), ஜோதி (திருப்பத்தூர்), ஆகியோருடன் அருள், சிவசீலன் (திருப்பத்தூர்), லெனின் மகேந்திரன் (தர்மபுரி) ஆகிய தோழர்களும் கலந்து கொண்டு

அஞ்சலி செலுத்தினர். விழுப்புரம் மண்டலத்திலிருந்து மாநில நிர்வாகிகள் தோழர் ஆர். சிவராஜ், கே. காங்கேயன், கிளைச் செயலாளர் எம். பாலாஜி (திருவண்ணாமலை) மாநில செயற்குழு உறுப்பினர் ஆ. பெருமாள் உள்ளிட்ட தோழர்களும், தோழர் எஸ். விஜயகுமார் (கள்ளக்குறிச்சி), தேசிங்கு (கடலூர்), மத்திய அமைப்பின் முன்னாள் மாநில நிர்வாகி எம். புருஷோத்தமன் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

மார்க்சிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் தோழர் காமராஜ், திருப்பூர் மாவட்ட செயலாளர் தோழர் முத்துக்கண்ணன், தீக்கதிர் கோவை பதிப்பின் பொது மேலாளர் எஸ்.ஏ. மாணிக்கம் ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

சென்னை தெற்கு மண்டத்திலிருந்து மாநில செயலாளர் தோழர் எம்.முருகானந்தம், கிளைச் செயலாளர் பண்டாராம் பிள்ளை (தெற்கு சென்னை-1), கிளைச் செயலாளர் தோழர் அன்பழகன் (தெற்கு சென்னை -2), ஆகியோரும் சென்னை வடக்கு மண்டலத்திலிருந்து சென்னை மேற்கு கிளையின் தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

மாநில மையத்திலிருந்து துணைப் பொதுச் செயலாளர்கள் தோழர்கள் கே.ரவிச்சந்திரன், கே. அருள்செல்வன், மற்றும் ஆர். விஜயகண்ணன், ஆகியோருடன் மத்திய அமைப்பின் முன்னாள் நிர்வாகி தோழர் என். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

**சகோதர சங்கங்கள் அஞ்சலி**

மின்சார தொழிலாளர் சம்மேளனத்தின் மாநில உபதலைவர் தோழர் டி. கந்தவேல், கணக்காயர் மற்றும் களத்தொழிலாளர் சங்கத்தின் மாநில தலைவர் எஸ். நாகராஜ், எம்ப்ளாயீஸ் பெடரேசன் மாநில பொருளார் பாஸ்டின்ராஜ், மகளிர் அமைப்பாளர் பாரதி மற்றும் தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கத்தின் மாநில துணைத்துலைவர் வீராச்சாமி ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

கேரள மின்வாரிய ஊழியர் சங்கம் சிஐடியுவின் சார்பாக தோழர் விஜயன் மற்றும் மூன்று தோழர்கள் நேரில் வந்து அஞ்சலி செலுத்தினர்.

23.09.2021 அன்று காலை 10.00 மணியளவில் அவர் வசித்து வந்த வீட்டிலிருந்து அவரது இறுதியாத்திரை நூற்றுக்கணக்கான தோழர்களின் பங்கேற்புடன் துவங்கியது. அலங்கரிப்பட்ட ரதத்தில் அவரின் பூத உடல் வைக்கப்பட்டு ஊர்வலமாக கொண்டு செல்லப்பட்டது. கோவை மின்வாரிய தலைமையகம் முன்பு வாகனத்தை நிறுத்தி நூற்றுக்கணக்கான பெண் ஊழியர்கள் உள்ளிட்ட தோழர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர். கோவை பாப்பநாயக்கன் பாளையம் GKD தகன மையத்தில் தோழர் எஸ்.பி.ஆரின் உடல் வீரமுழக்கத்தோடு சிதையூட்டப்பட்டது.

பின்னர் நடைபெற்ற இரங்கல் கூட்டத்திற்கு தோழர் தி.ஜெயசங்கர் தலைமை வகித்தார். இதில் மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் தலைவர் தோழர் என்.சின்னசாமி, தோழர் எஸ்.எஸ். சுப்ரமணியன், சிஐடியு மாவட்ட செயலாளர் தோழர் கிருஷ்ணமூர்த்தி, சி.பி.ஐ(எம்) கட்சியின் மாவட்ட செயலாளர் தோழர் வீ. இராமமூர்த்தி, மின் ஊழியர் மத்திய அமைப்பின் முன்னாள் நிர்வாகி தோழர் தியாகராஜன், கோவை மண்டலத்திற்குட்பட்ட சகோதர சங்க நிர்வாகிகள், கந்தவேல் - சம்மேளனம், நாகராஜ் AESU நாசர் - தொமுச - வீராச்சாமி - ஐக்கிய சங்கம், இரவிச்சந்திரன் - எம்ப்ளாயீஸ் பெடரேசன், கே. அருள்செல்வன் - பொறியாளர் அமைப்பு, தோழர் கே.திருச்செல்வன் - உதவி பொதுச்செயலாளர் சிஐடியு, தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் பொதுச்செயாளர் தோழர் எஸ். இராஜேந்திரன், சிஐடியு மாநில பொதுச்செயலாளர் தோழர் ஜி.சுகுமாறன் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான தோழர் லாசர் ஆகியோர் இரங்கல் உரையாற்றினார்கள்.

தோழர் எஸ்.பி.ஆர். காட்டிய பாதையில் வர்க்க ஒற்றுமையை உயர்த்தி பிடித்து ஸ்தாபன பலத்தை அதிகரிக்க நாம் அனைவரும் பாடுபடுவதே தோழர் எஸ்.பி.ஆருக்கு நாம் செலுத்துகின்ற அஞ்சலியாகும்.

**தோழர் எஸ்.பி.ஆர் நாமம் வாழ்க!**



# மின்வாரிய ஒப்பந்த தொழிலாளியின் போராட்ட நாயகன்

## தோழர் எஸ். பஞ்சரத்னம்

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி

**அஞ்சலி**



மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு முன்னாள் உறுப்பினரும், சிஐடியுவின் தலைவர்களில் ஒருவருமான தோழர் எஸ்.பி.ஆர் என்று அன்போடு அழைக்கப்படும் தோழர் எஸ்.பஞ்சரத்னம் உடல்நலக் குறைவால் செப்டம்பர் 22 அன்று உயிரிழந்தார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கிறது. அவரது மறைவிற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. தோழர் எஸ்.பஞ்சரத்னம் மின் வாரியத்தில் எழுத்தர் பிரிவு ஊழியராக பணியாற்றி இடதுசாரி கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு தன்னை சிஐடியு ஸ்தாபனத்தோடு இணைத்துக் கொண்டு செயல்பட்டவர்.

மின் ஊழியர்களின் நலன்களுக்காக பல்வேறு போராட்டங்களை நடத்தியதில் முன்னணி பாத்திரம் வகித்தவர். மின்வாரியத்தில் பணி யாற்றிய பல்லாயிரம் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப் படுத்த வேண்டுமென பல்வேறு போராட்டங்களை நடத்திய அதே நேரத்தில் நீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்து உச்ச நீதிமன்றம் வரை சென்று 18 ஆயிரம் ஒப்பந்த தொழி லாளர்கள் பணி நிரந்தரம் பெற முக்கிய பங்காற்றியவர். எந்தவித உரிமையும் இல்லாமல் பணியாற்றிய 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பகுதிநேர ஊழியர்களுக்கு பணி நிரந்தரம் மற்றும் அடிப்படை சம்பளம் போன்ற இதர சலுகைகள் பெற்றுத் தர அரும்பாடுபட்டவர். தோழர் எஸ்.பஞ்சரத்னம் மின்வாரியத்தில் பணி யாற்றிக் கொண்டே சங்கப் பணிகளை செய்து கொண்டிருந்த போது அவரது பணி முழுமையாக சங்கத்திற்கு தேவை என கேட்டுக் கொண்ட அடிப்படையில் மின்வாரியப் பணி யிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு முழுநேரமாக சங்கப்பணி ஆற்றியவர். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினராக 10 ஆண்டுகாலம் பணியாற்றினார். சிஐடியுவின் அகில இந்திய செயற்குழு உறுப்பினர், இந்திய மின் ஊழியர் கூட்டமைப்பின் அகில இந்திய செயலாளர், சிஐடியு தமிழ் மாநில தலைவர்களில் ஒருவர், மின் வாரிய ஓய்வு பெற்ற நல அமைப்பின் துணைத் தலைவர் என பல பொறுப்புகளில் திறம்பட செயலாற்றியவர். தோழர் எஸ்.பஞ்சரத்னம் அவர்களது மறைவுக்கு செவ்வஞ்சலி செலுத்துவதுடன் அவரது மறைவால் வாடும் குடும்பத்தினர் மற்றும் தோழர்களுக்கு அனுதாபத்தையும் ஆறுதலையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு தெரிவித்துக்கொள்கிறது.



## மின்வாரிய ஒப்பந்த தொழிலாளர்களின் ஒளி விளக்கு

# தோழர் எஸ்.பஞ்சரத்னம் மறைவு!

கடந்த 45 ஆண்டுகாலமாக இந்திய மின் ஊழியர்களோடு ஒப்பந்த தொழிலாளர் பகுதிநேர ஊழியர்களின் வாழ்க்கையோடு பின்னி பிணைந்த தோழர் எஸ்.பி.ஆர் என்று பாசத்தோடு அழைக்கப்பட்ட தோழர் **எஸ்.பஞ்சரத்னம்** இன்று நம்மை விட்டு பிரிந்து விட்டார் என்ற அதிர்ச்சி செய்தி மின்வாரிய ஊழியர்களை ஆராதுயரத்தில் ஆழ்த்தி விட்டது.

தோழர் எஸ்.பஞ்சரத்னம் 1940 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டம் தச்சநல்லூரில் திரு.சங்கரலிங்கம் நாகம்மாள் தம்பதிக்கு மகனாக பிறந்தார். இவர் மின்சார வாரியத்தில் எழுத்தர் பிரிவு ஊழியராக பணியேற்று அந்த பிரிவு ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கணக்காயர் களத் தொழிலாளர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றி வந்தார்.

இவர் கேட்டகிரி தொழிற்சங்கத்தில் பணியாற்றிய போதே இடதுசாரி மனோபாவம் கொண்டவராகவும் தொழிலாள வர்க்க சிந்தனை யாளராகவும் விளங்கினார். அவசர நிலை அறிவிக்கப்பட்ட போது தொழிலாளர் உரிமைகளை சமரசம் இன்றி காக்கும் அமைப்பு தான் என்று முடிவு செய்து கேட்டகிரி ஸ்தாபனத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு சிஐடியு ஸ்தாபனத்தில் இணைந்து செயல்படலானார்.

அவசர நிலை அறிவிப்பை பயன்படுத்தி மின்வாரிய ஊழியர்கள் வழக்கமாக பெற்றுவரும் தீபாவளி முன் பணத்தை தீபாவளி கழித்த பின்னர் தருகிறேன் என்று அதிமுக அரசு அறிவித்த போது அதை ஏற்க இயலாது என்று தொழிலாளர்களை திரட்டி போராடிய போது காவல் துறையால் கைது செய்யப்பட்டு 1மாதத்திற்கு மேல் சிறை வாழ்க்கையை அனுபவித்தார். அந்த ஆண்டு தீபாவளியை நூற்றுக்கணக்கான ஊழியர்களோடு சிறையில் கொண்டாடினார்.

மின்வாரியத்தின் சிஐடியு வளர்சிக்காக அரும்பாடு பட்ட ஆயிரக்கணக்கான ஊழியர்களை மின்வாரியத்தில் இணைக்க அதிலும் குறிப்பாக சுமார் 18,000 ஊழியர்களை சகதொழிலாளர்களை கொண்டு அடையாளம் காண வழி வகுக்கும் நீதிபதி காலித் கமிட்டி தீர்வில் பிரதான பங்கு வகித்து நிரந்தரத்தை பெற்று தந்ததோடு ஒப்பந்த தொழிலாளர்களை ஒன்று திரட்டி வீதியில் இறங்கி போராடி நிரந்தரம் பெற உறுதுணையாக நின்றவர் தோழர் எஸ்.பி.ஆர்.

மிக குறைந்த கூலியை பெற்று எந்தவித உரிமையும் இல்லாமல் பணியாற்றிய 5000-க்கும் மேற்பட்ட பகுதிநேர ஊழியர்களுக்கு நீதிமன்றத்தில் நீண்ட நெடிய போராட்டம் நடத்த பணி நிரந்தரம்

அடிப்படை சம்பளம் இதர சலுகைகளும் பெறபெரும் பங்காற்றியவர் தோழர் எஸ்.பி.ஆர்.

தனது அழுத்தமான வாதத்திறமையால் மின்வாரியத்தில் பணியாளர்களின் பல்வேறு கோரிக்கைகளை வெற்றி பெறச்செய்தவர்.

அவரது ஆங்கிலப் புலமையும் பிரச்சனைகளின் மீது அவர் செலுத்துகின்ற கவனமும் போராட்ட இயக்கங்களை கொண்டு செல்கின்ற பாங்கு தனித்துவமானது.

1993 பிப்ரவரி மாதம் நெல்லையில் நடைபெற்ற மத்திய அமைப்பின் மாநாட்டில் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்த அதற்கான பணிகளை செய்ய வேண்டி இருப்பதால் அருமை தோழர் எஸ்.பி.ஆர் அவர்களை அவர் மின்வாரியத்தில் வகித்து வந்த நிர்வாக மேற்பார்வையாளர் பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என மாநாடு வற்புறுத்தியது.

மாநாட்டின் கட்டளையை ஏற்று தனது குடும்பச் சூழலையும் பொருட்படுத்தாமல் மின்வாரிய பணியை ராஜினாமா செய்து ஒப்பந்த ஊழியர்களின் வாழ்வில் ஒளியேற்றி மின் ஊழியர் மத்திய அமைப்பை சிஐடியு காட்டிய பாதையில் முன்னெடுத்துச் சென்ற மகத்தான பணி, அருமை தோழர் எஸ்.பி.ஆர் அவர்களால் மட்டுமே முடியும்.

இன்றைக்கும் நமது தோழர்கள் குறிப்பாக ஒப்பந்த ஊழியர்களில் இருந்து நிரந்தரமான தோழர்கள் தங்களது வீட்டில் தோழர் எஸ்.பி.ஆர் அவர்களை நினைவு கூறுகின்ற வகையில் அவரது புகைப்படத்தை வைத்து இருப்பது மின் ஊழியர்கள் அவர் மீது கொண்டுள்ள அன்புக்கு சாட்சி...

1996-ல் ஈரோட்டில் நடைபெற்ற மின் ஊழியர் மத்திய அமைப்பு மாநாட்டில் பொதுச்செயலாளராக தேர்வு செய்யப்பட்டு 2006 சேலம் மாநாட்டு வரையிலும், பின்பு தலைவராக 2009 தஞ்சை மாநாடு வரை தன்னுடைய மகத்தான பணியை நிறை வேற்றியவர் அருமை தோழர் எஸ்.பி.ஆர். அவர்கள். சேலம் மாநாட்டில் தலைவராக தேர்வு செய்யப்பட்ட பின்பு தஞ்சை மாநாடு வரை மூன்று ஆண்டுகளில் மத்திய அமைப்பை வழி நடத்தி அமைப்பிற்கு பெருமை சேர்த்தவர் அருமை தோழர் எஸ்.பி.ஆர்.

தஞ்சை மாநாட்டில் மத்திய அமைப்பின் அனைத்து பொறுப்புகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஆனால் அதே நேரத்தில் மத்திய அமைப்பினுடைய ஸ்தாபன வளர்ச்சிக்கு ஆலோசனை களை தனது நினைவிருக்கும் வரை வழங்கி அன்றாட நிகழ்வுகளை கண்காணித்து கொண்டிருந்த ஒரு களப்போராளி அருமை தோழர் எஸ்.பி.ஆர்.

சிஐடியுவின் தமிழ் மாநிலக்குழு மாநில செயலாளர்களில் ஒருவராக பின்பு துணைத் தலைவர் களில் ஒருவராக பணியாற்றியவர். கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக்குழு உறுப்பினராக பணியாற்றி மின் அரங்கில் முன்னனி ஊழியர்களை அரசியல் படுத்துவதில் பெரும் பங்காற்றியவர்.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய உறுப்பினராகவும் பணியாற்றினார், மின்துறை பொறியாளர் அமைப்பையும், தமிழ்நாடு மின்வாரிய ஓய்வு பெற்றோர் நல அமைப்பையும் உருவாக்கி பலப்படுத்துவதில் தனது மகத்தான பணியை செய்தவர் அருமை தோழர் எஸ்.பி.ஆர்.

பகுதிநேர பணியாளர்களுக்கு சத்துணவு ஊழியர்களுக்கான இணையான சம்பளத்தை பெற்று தருவதில் உச்சநீதிமன்றம் வரை சென்று வாதாடி அதற்கான அத்தனை தஸ்தாவேஜுகள் தயாரிப்பதிலும், நீதிபதி காலித் கமிஷன் பணிகளில் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரம் படுத்துவதற்கான தஸ்தா வேஜுகளை தயாரிப்பதிலும், வருங்கால வைப்பு நிதி தொடர்பான வழக்கில் தஸ்தாவேஜுக்களை தயாரிப் பதிலும் தோழர் எஸ்.பி.ஆரின் பணி மகத்தானது.

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் எதிர்காலத்தை கணக்கில் கொண்டு புதிய இளம் தோழர்களை அடையாளப்படுத்தி அவர்களுக்கு மாநில பொறுப்பு வழங்கி ஊக்கப்படுத்தி இன்றைக்கு மத்திய அமைப்பின் தலைவர்களாக உருவாக்கி இருப்பதில் தோழர் எஸ்.பி.ஆர் அவர்களின் பணி அவர் செலுத்திய கவனம் மகத்தானது.

தோழர் எஸ்.பஞ்சரத்னம் அவர்களது மறைவு மின்வாரிய ஊழியர்களுக்கு மட்டும் அல்லாது தமிழக தொழிலாளி வர்க்கத்திற்கு பேரிழப்பாகும்.

அன்னாருக்கு துணைவியார் திருமதி இந்திராணி மகள் விஜயலட்சுமி, 2 மகன்கள் பி. சீனிவாசன் (இவர் இரண்டு ஆண்டுக்கு முன்பு உடல் நலம் பாதிக்கப்பட்டு மறைந்தார்) இன்னொரு மகன் பி. சண்முகம் உள்ளனர்.

அவரை இழந்து வாடும் மகள் , மகன் மற்றும் உறவினர்களுக்கும் மின்வாரிய ஊழியர்களுக்கும் மின் ஊழியர் மத்திய அமைப்பு தனது ஆழ்ந்த அஞ்சலியை செலுத்துகிறது.

## மின்ஊழியர்களின் மகத்தான தலைவர்
## தோழர் **எஸ். பஞ்சரத்னம்**

அகில இந்திய
தொழிற்
சங்க மையம்
**அஞ்சலி**



தோழர் எஸ்.பஞ்சரத்னம் அவர்கள் நம்மைவிட்டு பிரிந்துவிட்டார். சிஐடியு தமிழ்நாடு மாநிலக்குழுவின் நிர்வாகிகளில் ஒருவராக நீண்டகாலம் பணியாற்றியவரும், சிஐடியு மத்திய செயற்குழுவின் முன்னாள் உறுப்பினருமான தோழர் எஸ்.பஞ்சரத்தினம் அவர்களது மறைவுச் செய்தி அறிந்து, சிஐடியு தனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. 82வயதான தோழர் பஞ்சரத்னம் 1970களின் முற்பகுதிகளி லிருந்து தமிழ்நாட்டில் மின்சார வாரிய ஊழியராக சிஐடியு-வுடன் தன்னை இரண்டறப் பிணைத்துக் கொண்டவர். தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் தலைவராக பரிணமித்தவர். சிஐடியுவில் இணைக்கப்பட்ட மிகப்பெரிய அமைப்பு இது. மின் ஊழியர் மத்திய அமைப் பின் பொதுச் செயலாளர் என்ற முறையில், மாநில மின்சார வாரியத்தில் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்வதில் பிரமிக்கத்தக்க எழுச்சியை உருவாக்கியவர்; அதன் விளைவாக 25ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரம் செய்வது தொடர்பாக உச்சநீதி மன்றத்தில் வழக்கு வெற்றிபெற்றது என்பது குறிப்பிடத் தக்கது. தோழர் பஞ்சரத்னம் அவர்களது மறைவுக்கு சிஐடியு தனது செங்கொடியை தாழ்த்தி மரியாதை செலுத்துகிறது. அவரை இழந்துவாடும் குடும்பத்தினருக்கும், நமது தோழர்களுக்கும் இதயப் பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது. தோழர் எஸ்.பஞ்சரத்னம் புகழ் நீடுழி வாழ்க!

தோழர் **தபன்சென்**
பொதுச் செயலாளர்
அகில இந்திய சிஐடியு

## மின்ஊழியர்களின் போராளி
## தோழர் **எஸ். பஞ்சரத்னம்**

தமிழ் மாநில
சிஐடியு
**அஞ்சலி**



தோழர் எஸ்.பஞ்சரத்தினம் அவர்கள் சிஐடியு அகில இந்திய செயற்குழு உறுப்பின ராகவும், சிஐடியு தமிழ்நாடு மாநிலச் செயலாளராகவும், மின் ஊழியர் மத்திய அமைப்பின் செயலாளராகவும், தமிழ்நாடு மின்வாரிய ஒழுங்கு முறை ஆணையத்தின் உறுப்பினரா கவும், மின்வாரிய ஓய்வுபெற்ற ஊழியர் நல அமைப்பின் துணைத்தலைவராகவும் பல பொறுப்புகளில் இருந்து திறம்படச் செயலாற்றியவர். தனது வாழ்நாள் முழுவதும் தொழிலாளி வர்க்கத்தின் நலனுக்காக அர்ப்பணித்த தோழரின் மறைவு தமிழக தொழிலாளி வர்க்கத்திற்கு பேரிழப்பாகும். தோழரை இழந்து வாடும் அவரின் குடும்பத் தினருக்கும், உறவினர்களுக்கும், தமிழக தொழி லாளிகளுக்கும் சிஐடியு மாநிலக்குழு தனது ஆழ்ந்த இரங்கலையும், அஞ்சலியையும் உரித்தாக்குகிறது

தோழர் **அ. சவுந்திராசன்**/தலைவர்
தோழர் **ஜி. சுகுமாறன்**
பொதுச் செயலாளர்
தமிழ்மாநில சிஐடியு



தோழர் ஏ.கே.பி-யுடன் எஸ்.பி.ஆர்




தோழர்

# எஸ்.பஞ்சரத்தினம்

## மின்சார வாரியத் தொழிலாளர்களின் மறக்க முடியாத பெயர், அழிக்க முடியாத சரித்திரம்!

1995 ஆம் ஆண்டு ஸ்பிக் நிறுவனத்திலிருந்து நான் உட்பட 5 தோழர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டோம். அதன் பிறகு கட்சியின் முழுநேர ஊழியராக பணி புரிய வேண்டும் என்று தூத்துக்குடி மாவட்டக்குழு முடிவு எடுத்தது. தொழிற்சங்கப் பணிகளில் ஓரளவு பரிச்சயம் இருந்தது. தூத்துக்குடி அனல்மின் நிலைய ஒப்பந்தத் தொழிலாளர்கள் சங்கத்திற்கு நான் செயலாளர் ஆக்கப்பட்டேன். மூவாயிரத்திற்கும் அதிகமான ஒப்பந்தத் தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள்.

ஒப்பந்த தொழிலாளர்களில் பெரும்பாலானோர் தாங்கள் சிஐடியு என்றே கருதிக் கொண்டிருந்தனர்.. அந்த தொழிற்சங்கத்தை நிலைநிறுத்துவதில் செயலூக்கம் உள்ளதாக செய்ததில் தோழர்கள் பி.சம்பத், கே.கந்தசாமி, சமீபத்தில் கோயமுத்தூரில் தன்னுடைய 40 லட்சம் ரூபாய் பெருமானமுள்ள வீட்டை மார்க்சிஸ்ட் கட்சிக்கு நன்கொடையாக அளித்த தோழர் துளசிதாஸ் உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் பங்களித்து இருந்தார்கள்.

இச்சமயத்தில் அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். தோழர் சம்பத் கூறினார், இந்த தொழிற்சங்கம் மிகவும் செயலூக்கமுள்ளது, தினசரி தலையிட வேண்டிய பணிகள் இருக்கும். இதுவெல்லாம் முறையாக நடக்கிறது என்ற போதும்கூட, அரசியல் படுத்துதல் என்பது பெருமளவு நடைபெறவில்லை. அமைப்பாக்குவதிலும் பிரச்சனை இருக்கிறது. அத்தனை பேரும் தங்களை சிஐடியு என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிஐடியு உறுப்பினர் என்பது 500ஐ தாண்டவில்லை. எனவே இவற்றில் எல்லாம் கவனம் செலுத்த வேண்டும் என்கிற அறிவுரையோடு தோழர் சம்பத் அந்த தொழிற்சங்கத்தில் பணியாற்ற வேண்டும் என்று எனக்கு ஆலொசனை கூறினார்.

ஸ்பிக்லிருந்த இருந்த தொழிற்சங்க அனுபவத்திற்கும் தூத்துக்குடி அனல் மின் நிலைய தொழிற்சங்க அனுபவத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு. ஸ்பிக்கை பொறுத்தவரை நிர்வாகத்துடனும் அரசு எந்திரங்களுடனும் மோதவேண்டி இருந்தது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை பொருத்தமட்டில், இந்த இரண்டு பேரையும் தாண்டி, சமூக விரோதிகளாக இருக்கக்கூடியவர்கள் அங்குள்ள ஒப்பந்தகாரர்களோடு அவர்களுக்கு சேவகம் புரிகின்றவர்களோடு மோத வேண்டியது இருந்தது. அப்போது மத்திய அமைப்பின் பொதுச் செயலாளராக தோழர் பஞ்சரத்தினம் இருந்தார்.

அப்போது தொழிலாளர்களுக்கு 30 ரூபாய், 40 ரூபாய், 50 ரூபாய் என்றுதான் அவர்கள் சம்பளம் கொடுத்துக் கொண்டிருந்தனர். தோழர் எஸ்.பி.ஆரோடு பேசியதில், நாம் 84.50 பைசா

தினசரி கூலி சம வேலைக்கு சம ஊதியம்என்கிற முறையில், நாம் அதை உத்திரவாதப் படுத்தியிருக்கிறோம் என்று சொன்னார். ஆனால் ஒப்பந்தக்காரர்கள் அவர்களுக்கு இருந்த அரசியல் ஆதரவோடு இதனை வழங்க மறுத்தார்கள். பிறகு சங்கத்தில் பேசி என்ன பணம் கொடுக்கிறார்களோ அந்த பணத்தை மட்டும் சம்பளமாக கொடுக்கிறார்களோ அதற்கு மட்டும் சம்பளப் பட்டுவாடா பட்டியலில் கையெழுத்திடுவது என்று முடிவு செய்தோம். ஒப்பந்தக்காரர்கள் மிகவும் தெனாவட்டாக இதனால் என்ன வந்துவிடப்போகிறது என்று எண்ணிணார்கள். பிறகு தோழர் பஞ்சரத்தினம் அதையெல்லாம் நகல் எடுத்து அனுப்பச் சொன்னார்.

16.4.98ல் ஒரு தீர்ப்பு வந்தது. அந்த தீர்ப்பில்தான் 84.50 என்பதை அதற்கு முன்தேதியிட்டு கொடுக்க வேண்டும். அதை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்துக் கொள்ள வேண்டும். அதற்கு முன்னதாக மின்வாரியம் இதையெல்லாம் கொடுத்துவிட வேண்டும் என்று சொன்னார்கள். மொத்த தொகை 5.23 கோடி. இதையொட்டி மிகப் பெரிய போராட்டங்கள் தூத்துக்குடி அனல்மின் நிலையத்தில் நடைபெற்றது. அரசியல் ஆதரவோடு தனிப்பட்ட முறையில் தாக்குதல் நடத்துவதற்கு எல்லாம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது.

அந்த காலத்தில் தோழர் எஸ். பி.ஆர் வழிகாட்டிய வேகமும் முறையும் ஒப்பற்றது.இப்போது இருப்பது போல அப்போது மொபைல் போன் வசதி கிடையாது; மத்திய அமைப்பு தொலைபேசியில்தான் தொடர்பு கொள்ள வேண்டும். அவர் ஒரு ஆலொசனை சொன்னார். பேஜர் என்று ஒரு கருவி இருந்தது. அதை வாங்கிக் கொள்ள சொன்னார். அநேகமாக எந்த ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும் எந்நேரமாக இருந்தாலும் சரி அவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் அடுத்த நிமிடமே அந்த கம்பீரமான குரல் மட்டுமல்ல ; ஒரு நம்பிக்கை அளிக்கிற உற்சாகம் அளிக்கிற போராட்டத்தில் உறுதியாக நிற்க வேண்டும் என்கிற உந்துதல் அளிக்கிற, வெற்றி பெற்று விடுவோம் என்று நம்மை ஊக்கப்படுத்தும் குரலைக் கேட்க முடியும். ஏராளமான அனுபவங்கள் இருக்கிறது.

தோழர் பஞ்சரத்தினம் ஒப்பந்த தொழிலாளர்கள் பகுதிநேர தொழிலாளர்களாக போதே, அதற்கு முன்னதாககாலித் கமிஷன் என்று தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த ஊழியர்களாக பணியாற்றி உழன்று கொண்டிருந்த பலரை நிரந்தரத் தொழிலாளியாக அவருடைய வாழ்க்கையில் ஒளி ஏற்றியவர். இந்த 16.4.98 சட்டத்தின்படி அதிகபட்சமாக ஒரு தொழிலாளிக்கு 48 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. 1998 இல் 48 ஆயிரம் ரூபாய் என்பது ஒரு ஒப்பந்த தொழிலாளிக்கு எவ்வளவு பெரிய தொகை என்பது தெரியும். சில குடும்பங்கள் குடும்பமாகவே ஒப்பந்த தொழிலாளியாக பணியாற்றிக் கொண்டிருந்தார். அதில் ஒரு குடும்பத்தினர் ஒரு தனிப்பெண் அவருக்கு மூன்று பெண் குழந்தைகள். இந்த நான்கு பேரும் வேலை பார்த்து வந்தார்கள். 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வாங்கி கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு அப்படி ஒரு பணத்தை அதற்கு முன்பு அவர்கள் பார்த்தது கிடையாது. அந்த பணத்தை வாங்கிக் கொண்டு வந்தவர்கள். அது இரவு 1:30 மணி இருக்கலாம் அந்த நான்கு பேருடைய எட்டு கண்களிலும் இருந்து அந்த உணர்ச்சி, தோழர் எஸ்பிஆர் பற்றி அவர்களுக்கு பெரிதாக தெரியாது.

நாங்கள் எல்லொரும் அதில் பணியாற்றிய உள்ளூர் தொழிற்சங்க ஊழியர்கள் நாங்கள் அனைவரும் அவர்களுக்கு தெய்வமாக தெரிந்தோம். பின்னர் ஒரு சமயம் தோழர் ஒருவர் புதிதாக வீடு கட்டி இருந்தார். அது குடியேறும் போது என்னையும் அழைத்திருந்தார். அப்போது அவர் சொன்னார், தோழர் எஸ்.பி.ஆர் தமிழகத்தில் பல பத்தாயிரக்கணக்கான குடும்பங்களில் ஒளி ஏற்றியவர் என்றார். உண்மையில் அதற்கு அந்த வார்த்தைக்கு அந்த சூழலுக்கு முற்றிலும் தகுதியான தலைவர் தோழர் எஸ். பஞ்சரத்தினம்.

அதிகாரிகளோடு பேசுகிற போது அவருக்கு சட்டத்திலும் போராட்ட அனுபவமும் ஒருங்கே பெற்றவர் என்கிற காரணத்தினால் அந்த குரலில் ஒரு உறுதியும் அதிகாரமும் இருக்கும். இப்படித்தான் செய்ய

வேண்டும் என்பதை வலியுறுத்தி சொல்லுவார். அவரோடு ஒப்பிடுகிற போது, தொழிற்சங்கத்தில் இளையவன் குறிப்பாக மின் ஊழியர் மத்திய அமைப்புக்கு நான் புதியவன். ஆனால் எந்த ஒரு ஆலொசனை சொன்னாலும் சரி, எத்தனை போராட்டங்களை நடத்தினாலும் சரி அதற்கெல்லாம் ஒரு உத்வேகம் அளித்த மிகப்பெரிய தலைவர் எஸ் பஞ்சரத்தினம் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியும். தொழிற்சங்க நுணுக்கங்களை போராட்ட வழி முறைகளை பலரிடமிருந்து நான் கற்றுக் கொண்டிருக்கிறேன். அதில் முதலாவது தோழர் பி.சம்பத்தை அடுத்தது தோழர் எஸ்.பஞ்சரத்தினம்.

தோழர் எஸ்.பி.ஆர் மின் ஊழியர் மத்திய அமைப்பின் மகத்தான தலைவர் என்பதில் எந்தவித சந்தேகமும் கிடையாது. அவர் தொழிற்சங்க தலைவராக இருந்த காலத்தில் மின் ஊழியர் மத்திய அமைப்பு உறுப்பினர்கள்மட்டுமின்றி, மின்சார வாரிய ஊழியர்கள் அத்தனை பேருமே, யாராவது ஒருவருக்கு மிக அதிகமாக கடமைப்பட்டிருக்கிறார்கள் என்றால் அது தோழர் பஞ்சரத்தினம் அவர்களுக்கு என்று உறுதியாக சொல்ல முடியும்.

கடந்த 20 ஆம் தேதி அவரை பார்த்து வருவதற்காக சென்றியிருந்தேன் அவருக்கு உணர்வு ஏதும் இல்லை. அவருடைய பேத்தியிடம் கேட்டேன். உங்கள் தாத்தாவை பற்றி தெரியுமா என்று அவள் தலையசைத்தாள். நான் சொன்னேன் உங்கள் குடும்பத்திற்கு அவர் யாருக்கெல்லாம் என்ன செய்திருக்கிறார் என்று தெரியாது. ஆனால் தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான ஒப்பந்த ஊழியர்கள் அவர்களின் குடும்பத்திலுள்ள குழந்தைகளையும் படிக்க வைத்திருக்கிறார்கள் என்றால், வீடு கட்டியிருக்கிறார்கள் என்றால்... ஏன் இப்போது மின்சார வாரியத்தில் இருக்கக்கூடிய ஒப்பந்த தொழிலாளர்களுக்கு என்றாவது நிரந்தரம் ஆகிவிடுமோ என்கிற நம்பிக்கை இருக்கிறது என்றால், அதற்கு தோழர் பஞ்சரத்தினம்தான் காரணம் என்று சொன்னேன். அவர் அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார். அவருடைய மகள் கூறினார், இவ்வளவு வேலைகளுக்கு இடையில் அவர் எங்களையும் சிறப்பாகத்தான் கவனித்துக் கொண்டார் என்று சொன்னார்.

தோழர் எஸ். பஞ்சரத்தினம் நிச்சயமாக மின்சார வாரிய தொழிலாளர்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத பெயர், அழிக்க முடியாத சரித்திரம்.

**கே.கனகராஜ்**
CPI(M) மாநில செயற்குழு உறுப்பினர்






மார்க்சிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநிலக்குழு உறுப்பினரும், தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் முன்னாள் பொதுச் செயலாளரும், ஆயிரக்கணக்கான ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தரப்படுத்த, நீதிமன்றத்தின் படிக்கட்டுகளிலேயே தவம் புரிந்து வெற்றி பெற்றவருமான எஸ்.பி.ஆர் என்று சுருக்கமாக அழைக்கப்படுகிற தோழர் பஞ்சரத்னம் இன்று காலமானார் என்ற செய்தி மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியதோடு அவருடனான தோழமையில் கிளைத்த நினைவுகளும் மேலெழும்பியது!

1975 ஆம் ஆண்டு என்று நினைவு. மின் ஊழியர் சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்தை தோழர் டி.ஆர்.புருஷோத்தமன் முன்கை எடுத்து வேலூரில் நடத்தினார். அவசர காலம் அறிவிக்கப்பட்ட நிலை. நன்றாக எனக்கு நினைவு உள்ளது. வரவேற்புரை ஆற்றிய நான் " **கணக்காயர் சங்கத்தில் நேர்மைக்கு பஞ்சம் என்பதை தெளிந்து ரத்தினமாக ஊழியர் சங்கத்திற்கு வந்திருக்கும் பஞ்சரத்னம் அவர்களே வருக**" என்று கணக்காயர் சங்கத்திலிருந்து விலகி, ஊழியர் சங்கத்தில் இணைந்துகொண்டு எஸ்.பி.ஆர் பங்கேற்ற முதல் கூட்டத்தில் நான் கூறினேன். அது முதற் கொண்டு 1990 வரை நான் கட்சிப்பணிக்கு செல்லும்வரை அவருடன் பழகிய நினைவுகள் போற்றி பாதுகாக்கப்பட வேண்டியவையே!

கணக்காயர் சங்கத்தில் இருந்தாலும் மார்க்சீய அனுதாபியாக இருந்த தோழர். எஸ்.பி.ஆருடன் பேசிப்பேசி கரைத்து கட்சிக்குள் கொண்டு வந்தவர் தோழர் டி.ஜானகிராமன் தான். அவசர காலத்தில் தலைமறைவாக இருந்த தோழர்களுக்கு கடித தொடர்பாளராகவும், விபிசி உட்பட சில தோழர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவராகவும் அவர் இருந்தார் என்று தோழர் டி.ஜே மூலம் அறிந்தேன்! பின்னர் சென்னையில் இரு முறை மாற்றல் பெற்று பணியாற்றிய காலத்தில் அவருடன் மிக நெருக்கமாக பழகும் வாய்ப்பு கிடைத்தது.

மத்திய அமைப்பின் அலுவலகத்தில் எஸ்.பி.ஆர், என் தம்பி ராஜசேகரன் ஆகியோருடன் நானும் ஒன்னரை வருட காலம் தங்கியிருந்தேன். இரவு நேரங்களில் பல்வேறு விஷயங்களை பகிர்ந்து கொள்வோம். இளமைக்காலத்தில் திரைப்படம் பார்த்தவர் சங்கப்பணிகளில் முழுமையாக ஈடுபட தொடங்கிய பின் திரைப்படம் பார்ப்பது நின்று போய்விட்டது என்றே சொல்லலாம்! அண்ணா சாலையில் ஒரு தியேட்டரில் அவரின் இளமைக்காலத்தில் ரசித்த இந்தி திரைப்படம் ஒன்று வந்திருக்கிறது என்று அறிந்தபோது அதை பார்க்கவேண்டும் என்று விரும்பியதோடு, என்னையும் அழைத்துக் கொண்டு போனார். அந்த திரைப்படத்தின் பாடல்களோடு அவர் ஒன்றிப்போனது எனக்கு இன்னொரு எஸ்.பி.ஆரை காட்டியது.

இந்த இடத்தில் இன்னொரு நிகழ்வை குறிப்பிட்டே ஆக வேண்டும். காலித்குழு வழக்கு தொடர்பாக தில்லியில் உச்ச நீதிமன்ற விசாரணைக்கு பெரும்பாலும் விமானம் மூலமே செல்வார். அவ்வாறு ஒரு முறை செல்லும் போது அவரின் அருகில் அவரைப்போலவே வேட்டி கட்டிய ஒருவர் அமர்ந்தார்.

இவர் அவரிடம் ஏதும் பேசவில்லையென்றாலும், அவர் மட்டும் இவரை திரும்ப திரும்ப பார்த்துக் கொண்டே இருந்தாராம்! கடைசியில் பொறுக்க முடியாமல் அவர் நீங்கள் தமிழ்நாடு தானே எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்டாராம். இவரும் நான் சென்னையிலிருந்து வருகிறேன் என்று கூறியுள்ளார். என்ன செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு, நான் தொழிற்சங்க தலைவராகவும், மின்வாரியத்தில் பணியாற்றுவதையும் கூறிவிட்டு, வழக்கு தொடர்பாக தில்லி செல்வதாகவும் கூறியுள்ளார். இவ்வளவு விவரங்களையும் எஸ்பிஆரிடம் கேட்டு தெரிந்து கொண்டாலும், எஸ்பிஆர் மட்டும் அவரிடம் ஏதும் கேட்கவில்லை. அவர் சற்று நேரம் பொறுமையாக இருந்துவிட்டு என்னை உங்களுக்கு தெரியுமா என்று கேட்டிருக்கிறார். தெரியவில்லை என்று கூறியவுடன் அவருடைய முகம் சுருங்கிப்போய் விட்டதாம். திரைப்படம் பார்ப்பீர்களா என்று கேட்டதற்கு, அதற்கெல்லாம் தற்போது நேரமில்லை என்று கூறியிருக்கிறார். கடைசியாக அவர் நொந்து போய் சரி " விசு" என்ற நடிகரையாவது கேள்விப்பட்டிருக் கிறீர்களா என்று கேட்டுள்ளார். கொஞ்சம் யோசித்து இல்லை என்று தலையாட்டியிருக்கிறார். பாவம் உச்சபட்ச அவமானத்தின் எல்லைக்கே விசு போய் விட்டிருக்கிறார். என்னய்யா தமிழ்நாட்டில் என்னை தெரியாத ஆளே இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்தேன். எனக்கு கர்வ பங்கத்தை ஏற்படுத்திவிட்டீரே என்று தன்னைப்பற்றி சொல்லி இப்படியும் ஒருவரா என்று புலம்பித்தள்ளியுள்ளார். இதைக்கேட்ட மல்லியும் நானும் அவரை நேரம் கிடைக்கும் போதெல்லாம் கலாய்ப்பது வழக்கம். மல்லி அவரை திரைப்படத்திற்கு வற்புறுத்தி அழைத்துக் கொண்டும் போவதுண்டு!

அவருடைய ஆங்கில புலமை அபாரமானது. அவர் எழுதுகிற கடிதம் வாரிய ஆணை ஆங்கிலத்தில் எப்படி இருக்குமோ அப்படி இருக்கும். குடும்ப நல திட்டத்திற்கான சட்ட திட்டத்தை தமிழில் நானும் ஆங்கிலத்தில் அவரும் எழுதினோம். நான் எழுதிய விளம்பர வாசகங்கள் கூட அப்படியேதான் இருக்கிறது என்று நினைக்கிறேன். சங்க அலுவலகத்தில் தண்ணீர் போதாமையில் தினசரி காலையில் எம்எல்ஏ ஹாஸ்டலுக்கு சென்று தான் குளித்து விட்டு வருவோம். திருநெல்வேலிக்காரர் என்பதால் சென்னை குளியல் அவருக்கு ஒத்துவராது. நீரை அதிகம் செலவழித்தால் தோழர் கே.வி சத்தம் போடுவார் என்பதால் இந்த ஏற்பாடு. காலை 4 மணிக்கெல்லாம் எழுந்து கடற்கரை சாலையில் நடைப்பயிற்சியை முடித்துவிட்டு , நான் எழுந்திருக்கும் ஆறு மணிக்கு முன்பே வந்துவிடுவார். உடல் நலன் குறித்து அவர் எடுத்துக்கொண்ட அதிகபட்ச அக்கறை அது தான்!

அவருடைய உணவு பழக்கம் அலாதியானது. நொறுக்குத்தீனியில் பிரியம் உண்டு. வார விடுமுறை முடிந்து, ஆரணியிலிருந்து நான் சென்னை வரும்போது புளிசாதம் கட்டிக்கொண்டு வருவேன். அதை விரும்பி உண்பார். என் தாய் இறந்தபின் காரியத்திற்கு வந்து தரையிலேயே அமர்ந்து சடங்குகள் முடியும் வரை இருந்து எங்களு க்கு ஆறுதல் அளித்துச் சென்றதை மறக்கமுடியாது.

கட்சிப்பணிக்கு நான் சென்று விட்டாலும் என்னோடு அவர் தொடர்பிலேயே இருந்தார். மல்லியும் (மல்லிகார்ச்சுணன், தேனி) எஸ்பிஆரோடு தொடர்பில் இருந்ததால் பல விஷயங்கள் பரிமாறுவது தொடர்ந்தது. மல்லியின் இறப்புக்கு பிறகு இடைவெளி அதிகரித்து, கடந்த ஒரு வருடமாக தொடர்பற்று இருந்தேன். அவரின் இறப்பு இவ்வளவு விரைவில் நேரும் என்று எதிர்பார்க்கவில்லை. மின்வாரிய தொழிற்சங்கம் தொடர்பாக பல விவரங்களை அவரிடம் அறிந்து கொள்ள முடிந்தது. கணக்காயர் சங்கத்தின் அலுவலக செயலாளராக இருந்ததால் தொழிலாளர் தொடர்பாக வாரியத்தின் ஆணைகள் அனைத்தும் அநேகமாக அவர் அறிந்தவராக இருந்தது , மத்திய அமைப்புக்கு பெருமளவு உதவியாக இருந்தது.

குடும்ப பிரச்னைகள் குறித்து அவர் எதுவும் என்னிடம் பெரிய அளவு பகிர்ந்து கொண்டதில்லை. தொழிற்சங்க வாழ்க்கை குறித்தே அவர் தொடர்ந்து பேசிய வண்ணம் இருந்தார். ஏமாற்றம் இருவருக்கும் பொதுவானதாக இருந்ததால் அந்த நெருக்கம் ஏற்பட்டதா தெரியாது? மனசை விட்டு பழகுகிற, பரிமாறிக் கொள்கிற தோழர்கள் அருகி வருகையில் அவரின் இழப்பு எனக்கு பேரிழப்புதான்!

**செவ்வணக்கம் தோழர் எஸ்பிஆர்!**

**வெ. மன்னார்**




# ஆட்சி மாறினாலும் என்று தான் காட்சி மாறுமோ என்ற ஏக்கத்தில் மின் ஊழியர்கள்...

தமிழகத்தில் முக்கிய பொதுத்துறையான மின்துறையை சீரழிக்கவும், தனியார் பெரு முதலாளிகள் கொள்ளையடிக்கவும் வழிவகுத்த அதிமுக அரசு எடுத்த முயற்சியை ஒன்றுபட்ட போராட்டத்தால் தடுக்க முடிந்தது.

அதன் பின் தமிழக சட்டமன்ற தேர்தலில், ஆட்சி மாற்றத்தை மக்கள் ஏற்படுத்தினார்கள். தொழிலாளர் நலன் காக்கும் அரசு என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

பல்வேறு சாதனைகளை தமிழக திமுக அரசு நிகழ்த்தினாலும் துறைவாரியாக ஊழியர்களின் கோரிக்கை மேலோங்கி தான் நிற்கிறது.

மின்சார வாரிய ஊழியர்களுக்கு பிரதான கோரிக்கை, முந்தைய அதிமுக அரசால் மின்வாரியத்தில் அறிவித்த வேலை வாய்ப்புகளை அதாவது 2900 ஐடிஐ தொழில்நுட்பம் படித்தவர்கள், 600 உதவிப்பொறியாளர்கள், 1300 கணக் கீட்டாளர்கள், 500 இளநிலைஉதவியாளர்கள், 500 தொழில்நுட்ப உதவியாளர்கள், போன்ற பதவிகளை நிரப்ப நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறது வாரிய நிர்வாகமும், தமிழக அரசும்.

நிதி நிலைமையை காரணம் காட்டி மின்வாரியமும், தமிழக அரசும், இந்த பதவிகளை நிரப்ப யோசித்து வருகிறது. இருக்கின்ற 52,000 காலிப்பணியிடங்களை நிரப்பாமல் மக்கள் சேவை தொடர முடியாது என்பதை நிர்வாகமும் தமிழக அரசும் உணர மறுக்கிறது. முந்தைய அதிமுக அரசின் கடைசி காலத்தில் 9613 கேங்மேன் பதவிகள் நிரப்பப்பட்ட காரணத்தால் ஓரளவு பணிகள் மாநிலம் முழுவதும் நடைபெறுகிறது. ஆனால் பல ஆண்டுகளாக பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்த எந்தவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. தேர்தல் வாக்குறுதியில் கூறப்பட்டுள்ளதை தமிழக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்றும் நடவடிக்கை இல்லை. திமுக அரசிற்கு ஆட்சிகாலம் ஐந்தாண்டு இருக்கலாம். ஆனால் ஏற்கனவே தனது இளமையை வயதை தொலைத்து கனவுகளோடு எதிர்பார்த்து இருக்கும் ஒப்பந்த தொழிலாளி இன்னும் எத்தனை நாள் தான் காத்திருப்பான்?

மின்வாரிய தலைவரிடம் 19.08.2021 அன்றும் மின்துறை அமைச்சரிடம் 24.08.2021 அன்றும் பேச்சு வார்த்தை நடத்தியும் மாற்றம் காண இயலவில்லை!

புதிய மண்டலங்களை, வட்டங்களை, பிரிவுக்களை உருவாக்குவதினால் பணிகள் எளிதாகும். ஆனால் இவையனைத்தும் தொழிற் தகராறு சட்டத்தின்படி தொழிற் சங்கங்களுடன் 9A அறிவிக்கை கொடுத்து பேச வேண்டும். அதை விடுத்து தன்னிச்சையான எந்த அறிவிப்புகளும் போராட்டங்களை தூண்டச் செய்யும் என்பது தான் வரலாறு.

மின்வாரிய பணிகளுக்கு, தேவையான பொருட்களை இது வரை வட்ட அளவில் விடப்பட்ட ஒப்பந்த புள்ளிகளை ஒரே ஒப்பந்த புள்ளிகளின் கீழ் விலையை காரணம் காட்டி வாரிய நிர்வாகம் முடிவு செய்திருப்பது தனிநபர் ஒப்பந்ததாரரை வளர்த்து விடுவதற்கே ஒரே ஒப்பந்ததாரர் மூலம் கொள்முதல் செய்யும் பொருட்கள் குறிப்பாக பீங்கான் (மின்னோட்டம் ஏற்படாத பொருட்கள்) பொருட்கள், தரம் குறைந்த பொருட்களாக நிச்சயமாக மாறும். இது விநியோகப்

பிரிவில் மின்பாதைகளிலும் பொருத்தும் பொழுது, மின்தடை ஏற்பட்டு, மின்வாரிய களப்பிரிவு ஊழியர்களின் பணிச்சுமை அதிகரிப்பதோடு, மின் நுகர்வோர்கள் மின் தடையால் கடும் அவதிக் குள்ளாகி வரும் நிலை ஏற்படும். கடந்த காலங் களில் இது போன்ற பொருட்களை கொள்முதல் செய்த காரணத்தால் மின் ஊழியர்களுக்கு கூடுதல் பணிச்சுமை ஏற்பட்டு அவதிக்குள்ளாகினர். அந்த நிலை தொடர வேண்டுமா?

மின்வாரிய ஊழியர்களுக்கு கடந்த 01.12.2019 முதல் ஊதிய உயர்வு வழங்கியிருக்க வேண்டும். ஆனால் கொரானா தொற்று நோய் மற்றும் சட்டமன்ற தேர்தல் என பல்வேறு காரணங்களால் வழங்கப்படவில்லை. பேச்சு வார்த்தைக்குழு அமைத்தும் பேச்சுவார்த்தை கூட நடத்தப்படவில்லை. சரண்டர் விடுப்பும், பஞ்சப்படியும், நிதி தொடர்பான சலுகைகள் பறிப்பு மட்டுமே தொடர்கதையாகிறது.

கணக்கீட்டு ஊழியர்களின் நிலையோ சொல்லி மாளாது. பதவி உயர்வு பெற்றும் கீழ் பதவியை செய்யும் நிலை கணக்கு மேற்பார்வை யாளர்களையும் மதிப்பீட்டு அலுவலர்களையும் Revenue Augmentation என்ற முறையில் மின் இணைப்புகளை ஆய்வு செய்ய நிர்பந்தம்.

வாரிய அலுவலகத்தில் தினம் தினம் பரிசீலனைக் கூட்டம் அதற்கு மட்டுமே நேரமிருக்கிறது. தொழிலாளர்களின் பிரச்சனைகள் மீது பேச்சுவார்த்தை நடத்தி தீர்வுகாண முன் வருவதில்லை. பேச்சுவார்த்தை மட்டுமே நடக்கிறது. கோப்புகள் அனைத்தும் எப்போது தன்னை பார்ப்பார்கள் என்ற ஏக்கத்தோடு காத்துக்கிடக்கிறது. பதவி உயர்வுகள், இடமாறுதல் உத்திரவுகள், எல்லாம் தலைமைப் பொறியாளர்/ பணியமைப்பின் கையெழுத்துக்காக காத்துக் கிடக்கிறது. என்ன செய்வது தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு பொறுப்பும், கூடுதல் பொறுப்பாக தற்போதைய தலைமைப் பொறியாளர்/ பணியமைப்பு செய்து வருகிறார். இதனால் பணியாளர்கள் முதல் அதிகாரிகள், பொறியாளர்கள் வரை பதவி உயர்வு காலதாமதத்தால் ஆண்டு உயர்வில் காலாண்டு சலுகை பறிபோகிறது.

தொழிலாளர்களின் உணர்வுகளை வாரிய நிர்வாகமும், அரசும் உணரவில்லையெனில் வீதிக்கு செல்வதை தவிர வேறு வழியில்லை.

கோடிக்கால் பூதமடா !
தொழிலாளி கோபத்தின் ரூபமடா !!

**- எஸ்.இராஜேந்திரன்**




# பாராட்டுவோம்! வரவேற்போம்!

- ★ வேளாண் சட்டங்களை திரும்ப பெற வேண்டும் என்ற ஒரு மனதான தீர்மானம்,
- ★ நீட் தேர்விலிருந்து விதிவிலக்கு கோருகிற மசோதா நிறைவேற்றியது,
- ★ குடியுரிமை திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய கோரிய தீர்மானம் நிறைவேற்றியது,
- ★ ஆதி திராவிடர் பழங்குடியினர் நல ஆணையம் அமைத்தது,
- ★ இடஒதுக்கீடு அமலாக்கப்பட்ட விதம் குறித்து கண்காணிக்க சமூக நீதி கண்காணிப்புக்குழு அமைத்தது,
- ★ பெரியார் பிறந்த நாளை சமூக நீதி நாளாக கொண்டாடுவது,
- ★ விடுதலை போராட்ட வீரர் வ.உ.சி அவர்களை பெருமைப்படுத்தும் அறிவிப்புகள்,
- ★ பாரதியார் பிறந்த நாளை பள்ளி குழந்தைகள் விழா உள்ளிட்ட பல முற்போக்கான அறிவிப்புகள்,
- ★ முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா மீன்வள பல்கலைக் கழகத்தின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினராக கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பிர் வி.பி. நாகை மாலி அவர்களை நியமிக்கப்பட்டது.

# மக்களிடம் செல்வோம் பொதுத்துறை நிறுவனங்களை பாதுகாப்போம் மாநில சிறப்பு மாநாட்டில் தீர்மானம்...




தனியார்மயம், பங்கு விற்பனை, பணமாக்கல் ஆகியவற்றை எதிர்த்து சென்னையில் நடைபெற்ற தமிழ் மாநில சிறப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய தேசத்தின் சொத்துக்களான, பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு தாரை வார்க்கிறது மத்தியில் ஆளும் பாஜக அரசு. “வியாபாரம் செய்வது அரசின் வேலை இல்லை, மாறாக அது தனியாரின் வேலை” என்று அவற்றை விற்பதற்கு தாட்சரிச கொள்கையை மேற்கோள் காட்டுகிறது. இதற்கும் ஒரு படி மேலே போய் இந்திய நாட்டின் பிரதமர் மோடி, பொதுத்துறை நிறுவனங்கள் பிறந்ததே இறப்பதற்குத்தான் என்று பகிரங்கமாக அறிவிக்கிறார்.

தனியார்மயம், பங்கு விற்பனை, பணமாக்கல் என பல பெயர்களில் பொதுத்துறை நிறுவனங்கள் சூறையாடப்படுகின்றன. புதிய தாராளமயக் கொள்கையை இந்தியாவில் அமலாக்குவதே இதனுடைய அடிப்படைக் காரணமாகும். லாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்களை வாங்க கார்ப்பரேட் நிறுவனங்கள் துடிப்பாக காத்திருக்கின்றன. விற்பதற்கு தயாராக ஒன்றிய அரசும் இருக்கின்றது. ஆட்சியாளர்களும், கார்ப்பரேட் நிறுவனங்களும் கைகோர்த்து கூட்டுக் களவாணித் தனம் என்பதற்கு மிகச்சிறந்த உதாரணங்களே, பொதுத்துறை நிறுவனங்களையும், பொது சொத்துக்களையும், பொது சேவைகளையும் விற்பதாகும்.

பொதுத்துறை நிறுவனங்கள் 70 ஆண்டுகளில் மிக பிரமாண்டமாய் வளர்ந்து நிற்கின்றன. இந்திய தேச விடுதலை போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில், 1931இல் நடைபெற்ற, கராச்சி காங்கிரஸ் மாநாடு, கேந்திரமான தொழில்கள் அரசின் கைகளில் இருக்கும் என்று பிரகடனப்படுத்தியது. அதற்கு காரணம், மக்கள் மத்தியில் இருந்த எழுச்சியின் பிரதிபலிப்பு மற்றும் பகத்சிங் போன்ற ஒப்பற்ற தீரர்களின் தியாகமுமாகும். ஆனால் அதற்கு நேர்மாறாக இன்று மக்களின் சொத்துக்கள் சூறையாடப்படுகின்றன.

வேட்டையாடப்படும் பிரமாண்டமான பொதுத்துறை நிறுவனங்களின் மீது ஒன்றிய அரசு தொடுக்கும் தாக்குதல்களை பார்ப்போம்.

5 கோடி அரசு முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட எல்.ஐ.சி. நிறுவனம், இன்று ஆலமரமாய் வளரந்து 38 லட்சம் கோடி சொத்து மதிப்பு கொண்டதாக மாறியுள்ளது. இந்த எல்.ஐ.சி. நிறுவனத்தை சீரழிக்க ஐபிஓ மூலம் பங்கு விற்பனை செய்ய அரசு முடிவெடுத்துள்ளது. 50 கோடி பாலிசிதாரர்களைக் கொண்ட, 2 லட்சம் கோடி சொத்து மதிப்புக் கொண்ட பொது இன்சூரன்ஸ் நிறுவனத்தின் அரசின் பங்குகள் 51 சதமானத்திற்கும் கீழ் குறைக்கப்பட்டு விற்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. லாபமீட்டும் இரண்டு அரசு பொதுத்துறை வங்கிகளை தனியாருக்கு விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. 9 லட்சம் கோடி சொத்து மதிப்பு கொண்ட பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷனை அடிமாட்டு விலையில் 74,000 கோடிக்கு விற்பனை செய்ய முடிவு. ரயில்வே, விமானம், துறைமுகம் மற்றும் நெடுஞ்சாலைகள் உட்பட தனியார்மயம் பணமாக்கலுக்கு தப்பவில்லை. 4 லட்சம் கோடி சொத்து மதிப்புக் கொண்ட பி.எஸ்.என்.எல்.-ஐ, 4 ஜி சேவை துவங்க விடாமல் தடுத்து, தனியாருக்கு தாரைவார்க்க சதி. 14,917 செல் கோபுரங்கள், 286 லட்சம்

கண்ணாடியிழை கேபிள்கள் விற்பனைக்கு.

தொலை தொடர்பு மற்றும் பாதுகாப்பு துறைகளில், எந்தவித கட்டுப்பாடுமின்றி அந்நிய நேரடி மூலதனம் 100 விழுக்காடு அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக பன்னாட்டு பகாசூர நிறுவனங்கள் இந்திய தேசத்தின் தொலை தொடர்பு நிறுவனங்களை முழுமையாக கபளீகரம் செய்ய முடியும். இந்த தேசத்தின் ரகசியங்கள், காற்றில் பறக்க விடும் அபாயம் உள்ளது. லாபமீட்டும் விசாகப்பட்டினம் எஃகு தொழிற்சாலையை தனியாருக்கு விற்க அரசு முடிவு செய்துள்ளது. இந்திய தேசத்தை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள, 41 ராணுவ தளவாட உற்பத்தி தொழிற்சாலைகளை, அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவித்து, 7 கார்ப்பரேஷன்களாக மாற்றி, பின்னாளில் தனியார் மயப்படுத்தப்படும் சதித்திட்டம், இதை எதிர்ப்பதனால், ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய தடை விதித்து அவசர சட்டம் இயற்றப்பட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள லாபமீட்டும் பொதுத்துறை நிறுவனங்களான பெல், என்.எல்.சி, கல்பாக்கம் அணுமின் நிலையம், சேலம் ஸ்டீல் பிளாண்ட் ஆகியவையும் தனியார்மயமாக்கல் பட்டியலில் உள்ளன. இவையெல்லாம், ஒன்றிய அரசின் உடனடி திட்டங்களாக உள்ளன.

பொதுத்துறைகள் தேசத்தின் சொத்து, அது மக்களின் சொத்து, அதை விற்கவோ, கொள்ளை யடிக்கவோ, பணமாக்கல் என்ற பெயரில் தனியார்களின் கைகளில் ஒப்படைக்கவோ கூடாது என்று வலியுறுத்தி தேசபக்த உணர்வோடு, இந்திய தொழிலாளி வர்க்கம் போராடி வருகிறது.

**மக்களிடம் செல்வோம், சொல்வோம்**

பொதுத்துறைகள் அரசின் கட்டுப்பாட்டில் இருந்தால் மட்டுமே, அதன் பலன் மக்களுக்கு கிடைக்கும். உதாரணமாக எல்.ஐ.சி. நிறுவனம், நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட அடிப்படை கட்டுமானங்களுக்காக, இதுவரை 35 லட்சம் கோடி ரூபாய்களை ஒன்றிய அரசுக்கு கொடுத்துள்ளது. அதேபோல் அனைத்து பொதுத்துறை நிறுவனங்களும், அரசிற்கு ஆண்டு தோறும் டிவிடெண்டாக, வரியாக பல ஆயிரம் கோடி ரூபாய்களை கொடுத்து வருகின்றன. ஆனால், தனியார்மயம் என்பது, லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும். அதில், மக்களின் நலன் ஒருபோதும் இருக்காது. இந்தியாவில், கடந்த 30 ஆண்டுகளாக, இந்த தாராளமயக் கொள்கைகளை எதிர்த்து, தொழிற்சங்க இயக்கங்கள், 20 பொது வேலை நிறுத்தம் உட்பட பலகட்ட போராட்டங்களை நடத்தி வருகின்றன. துறை வாரியாக போராடலாம். ஆனால், துறைகளை கடந்து, நாசகர கொள்கைகளை எதிர்க்கிற விரிந்த போராட்டமாக அவை மாற வேண்டும். 10 மாதங்களாக போராடும் விவசாயிகளுடன், தொழிலாளி வர்க்கம் கை கோர்த்து போராடி வருகிறது.

இந்த சிறப்பு கருத்தரங்கின் மூலமாக, நவம்பர் 14 அன்று பொதுத்துறை, பொது சேவை பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்க அறைகூவல் விடுக்கிறது. எங்கள் சொத்துக்கள் கொள்ளை போவதோ என்று தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டம் நடத்திடுவோம். நவம்பர் 14 முதல் டிசம்பர் 31 வரை தமிழகம் முழுவதும், பிரச்சாரம் மற்றும் கலைப்பயணம் நடத்தி, ஜனவரி 4ஆம் தேதி தமிழகத்தின் நான்கு முனைகளில் இருந்து பிரச்சாரம் நடத்துவது.

இந்திய நாட்டின் பொதுத்துறைகளை பாதுகாக்கும் போராட்டங்களில் மக்களையும் இணைக்கும் வண்ணம், மேற்கண்ட இயக்கங்களை வெற்றிகரமாக்க வேண்டும் என தமிழகத்தில் உள்ள அனைத்து, மத்திய மாநில பொதுத்துறை நிறுவன ஊழியர் சங்கங்களை சென்னையில் நடைபெற்ற, தனியார் மயம், பங்கு விற்பனை, பணமாக்கல் எதிர்ப்பு சிறப்பு மாநாடு கேட்டுக் கொள்கிறது.





# விண்டுரைக்க மாட்டாத விந்தை பாரதி

**1951 ஆம் ஆண்டு திருச்சி வானொலியில் செல்லம்மாள் பாரதி ஆற்றிய உரை**

என் கணவர் பாரதி,சிறந்த கவிஞன் விசித்திரமான தன்மை நிறைந்தவன், அவனுக்கு எதுவும் பெரிதில்லை. ஆனால் கவலை நிறைந்த வாழ்நாளை கழிக்க வேண்டும் என்று எந்த பெண் தான் நினைக்க முடியும்.

ஊருக்குப் பெருமை என் வாழ்வு வையகத்தார் கொண்டாட வாழ வேண்டும் என்ற என் கனவு ஓரளவு பலித்ததென்னவோ உண்மை தான், இன்று என் கணவரின் புகழ் விண் முட்டிச் செல்கிறது, இன்று மகாகவியின் மனைவியாகப் போற்றப்படும் நான் அன்று பைத்தியக்காரன் மனைவியென்று பலராலும் ஏசப்பட்டேன். விநோதங்களை என் வாழ்க்கையில் அதிகம், உலகத்தோடொட்டி வாழ வகை அறியாத கணவருடன் அமர வாழ்வு வாழ்ந்தேன் என்றால் உங்களுக்கு சிரிப்பாகத்தான் இருக்கும், யாருக்கு மனைவியாக வாழ்ந்தாலும் வாய்க்கலாம், ஆனால் கவிஞன் மனைவியாகிருப்பது கஷ்டம், கவிஞர்கள் போக்கே ஒரு தனி, உண்பதிலும், உறங்குவதிலும் கூட சாதாரண மனிதரைப்போல் அவர்கள் இருப்பதில்லை,கற்பனைச்சிறகு விரித்துக் கவிதை வானில் வட்டமிடும் பறவை, பூலோகத்தில் இருண்ட வீட்டிலே மனைவிக்கும் மற்றவருக்கும், சம்பாத்தியம் செய்து போட்டு, சாதாரண வாழ்க்கை வாழ முடியுமா வறுமை கவிஞனின் தனி உடமை, கவிஞனுக்கு இந்த மண்ணுலகில் இன்பம் அளிப்பது கவிதை, ஆனால் வயிற்றுக்குணவு தேடி வாழும் வகையை அவன் மனைவி தான் கண்டுபிடிக்க வேண்டி வருகிறது. காதல் ராணியாக மனைவியை போற்றும் கவிஞன் அவளுக்குச் சாதமும் போட வேண்டும் என்ற நினைவேயின்றிக் காலம் கழித்தாலேயானால் என்ன செய்ய முடியும்.

கவிஞன் விசித்திரமான தன்மை நிறைந்தவன் அவனுக்கு எதுவும் பெரிதில்லை. ஆனால் கவலை நிறைந்த வாழ்நாளாக கழிக்க வேண்டும் என்று எந்தப் பெண் தான் நினைக்க முடியும் சிறுவதில் ஆசாபாங்களும், அபிலாசைகளும் ஒவ்வொரு பெண்ணின் மனத்திலும் நிறைந்திருப்பது இயற்கை தானே, சுகமாக வாழ்வதற்கு சொர்க்கலோகம் சென்றால் தான் முடியும் என்ற நிலை கவிஞன் மனைவிக்கு ஏற்பட்டு விடுகிறது. அந்த நாளிலிருந்த சத்திமுத்தப் புலவரின் மனைவியிடமிருந்து இன்று வரை சுகவாழ்வு ஒரே விதமாகத்தான் அமைந்திருக்கிறது. ஏகலந்தத்தில் அமர்ந்து விட்டால் முனிவரும் கூட அவரிடம் பிச்சை தான் வாங்க வேண்டும். ஆனால் மனைத்தலைவியாகிய நான் அவ்வாறு நிஷ்டையிடமிருக்க முடியுமா, கவிஞர்களில் பலதரப்பட்டவர்கள் இருக்கிறார்கள், கடவுளைப் பக்தி செய்யும் கவிஞன், காவியம் எழுதும் கவிஞன் இவர்களைப்புற உலக தொல்லைகளை சூழ இடமில்லை, எனது கணவரோ கற்பனை கவியாக மட்டுமல்லாமல் தேசியக் கவியாகவும் விளங்கியவர் அதனால் நான் மிகவும் கஷ்டப்பட்டேன், கவிதை வெள்ளத்தை அணை போட்டுத் தடுத்தது அடக்குமுறை, குடும்பமே தொல்லைக்குள்ளாகியது, ஆனால்

நுங்கும் நுரையுமாகப் பொங்கிவரும் புது வெள்ளம் போல அடக்குமுறையை உடைத்துக் கொண்டு பாய்ந்து செல்லும் அவர் கவிதை காலையில் எழுந்ததும் கண் விழித்து, மே நிலை மேல் மேலைச்சுடர் வானை நோக்கி வீற்றிருப்பார், ஸ்நானம் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு விதத்தில் அமையும், சூரிய ஸ்நானம் தான் அவருக்கு பிடித்தமானது, வெளியிலே நின்று நிமிர்ந்து சூரியனைப் பார்ப்பது தான் வெய்யிற் குளியல், சூரிய கிரணம் கண்களிலேயுள்ள மாசுகளை நீக்கும் என்பது அவர் அபிப்பிராயம், காலைக்காபி, தோசை, பிரதானமாயிருக்க வேண்டும் அவருக்கு தயிர், நெய்,புது ஊறுகாய் இவைகளைத் தோசையின் மேல் பெய்து தின்பார். அவருக்கு பிரியமான பொருளைச் சேகரித்துக் கொடுத்தால், அவரது நண்பர்களான காக்கையும், குருவியும் அதில் முக்கால் பாகத்தை புசித்து விடுவார்கள். எதை வேண்டுமானாலும் பொறுக்க முடியும், ஆனால் கொடுத்த உணவைத் தாம் உண்ணாமல் பறவைகளுக்குப் போட்டுவிட்டு நிற்கும் அவருடைய தார்மீக உணர்ச்சியை மட்டும் என்னால் சகிக்கவே முடிந்ததில்லை, சிஷ்யருக்குக் குறைவு இராது, செய்திகளுக்கும் குறைச்சல் இல்லை,கானாமுதமோ காதின் வழியே புகுந்து உடல் எங்கும் நிறைந்து விடும், களிப்பை மட்டும் பூரணமாக அனுபவிக்க முடியாமல் உள்ளிருந்து ஒன்று வாட்டும் அது தான் கவலை!

இச்சகம் பேசி வாழும் உலகத்தில் எப்பொழுதும் மெய்யே பேச வேண்டும் என்பது அவரது கட்டளை, எக்காரணத்தை கொண்டும் பொய் பேசச்கூடாது, இது எத்தனை சிரமமான காரியம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான்.

புதுவை எனக்குச் சிறைச்சாலை ஆகியது, சிறுச்சாலை என்ன செய்யும் ஞானிகளை அது ஒன்றும் செய்ய முடியாது தான் எதையும் ஏற்றுக்கொள்ளும் மனத்தின்மை அவர்களுக்கு உண்டு, ஆனால் என்னைப் போன்ற சாதாரணம் பெண்ணுக்கு இல்லறத்தை நல்லறமாக்க வேண்டும் என்ற ஒரே விஷயத்தை லட்சியமாக கொண்ட ஒருத்திக்கு சிறைச்சாலை நவநவமான துன்பங்களை அள்ளித்தான் கொடுத்தது. புதுவையில் தான் புதுமைகள் அதிகம் தோன்றின, புத முயற்சிகள், புதிய நாகரீகம், புதுமைப் பெண் எழுச்சி,புதுக்கவிதை இவை தோன்றின. இத்தனை புதுமைகளும் எழுதுவதற்கு நான் தான் ஆராய்ச்சி பொருளாக அமைந்தேன். பெண்களுக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டுமா வேண்டாமா என்று வெகுகாலம் ஆராய்ந்த பின்னரே, பெண் விடுதலை அவசியம் என்ற முடிவு கண்டு நடைமுறையில் நடத்துவதற்குத் துடித்துடித்தார் என் கணவர், இந்த முடிவை அவர் காண்பதற்குள் நான் பட்டபாடுசொல்லுந்தரமன்று, புதுவையில் அரசியலில் கலந்து கொள்ள வசதியும் இல்லா திருந்த போதிலும் தமிழ் இலக்கியத் தொண்டு செய்ததனால் ஒருவாறு மன அமைதி பெற்றிருந் தார். நமது பொக்கிசங்கள் என்று கருதத் தகும் படியான அவரது கவிதைகள் எல்லாம் அங்கே தான் தோன்றின. மனிதரை அமரராக்க வேண்டும் என்று தவிர்த்த என் கணவர் எத்தனை இடையூறுகளுக்கும் எதிர்ப்புகளும் ஏற்பட்ட போதிலும் அவற்றை யெல்லாம் மோதி மிதித்து விட்டு தம் லட்சியத்தில் முன்னேறும் துணிவு கொண்டுசெயலாற்றினார். மகாகவி நாட்டிற்காக, அதன் ஈகை, அன்பு சகிப்புத்தன்மை முதலான பண்புகளை கடைப் பிடித்து வாழ்ந்தது ஓர் அதிசயமன்று, ஆனால் இன்று அவரது பூத உடல் மறைந்த பின்பும் தமிழ் பேசும் ஒவ்வொர் உயிரினிடத்தும் அவர் கலந்து நிற்பத தான் அதிசயம் என்று எனக்குத் தோன்றுகிறது. விண்டுரைக்க மாட்டாத விந்தையடா என்ற அவரது கவிதை மொழியில் தான் இந்த மகிழ்ச்சியை தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

தொகுப்பு
தஞ்சை தனலட்சுமி



பெண் ஊழியர்களிடம் பாலியல் தொந்தரவு செய்த செயற் பொறியாளர் திருப்பத்தூர் எஸ். கிருஷ்ணன் மீது நடவடிக்கை எடுக்க கோரி அனைத்து சங்க கூட்டமைப்பு சார்பில் ஆர்ப்பாட்டம்



# மாற்றத்திற்கான நம்பிக்கை விதைகள் நம்மிடம்...


ஒரு அறிவியல் ஆசிரியர் அரசு பள்ளியில் அவர் பாடங்களோடு வாழ்வியலையும் சுற்றுசூழல் அக்கறையையும் கற்று கொடுகின்றார். குழந்தைகள் வீட்டில் அப்பா கடையில் இருந்து வாங்கி வரும் பழங்களை உண்ட பின் அதன் கொட்டைகளை குப்பையில் வீசி எறிவார்கள். ஆனால் அவரின் மாணவர்கள் பழங்களை உண்டபின் அதன் கொட்டைகளை கவனமாக தனித்தனியாக சிறிய டப்பாவில் அடைத்து குளிர்சாதன பெட்டியில் வைப்பார்கள். இவர்களின் பெற்றோர் கோடைக்காலம் முடிந்து இளவேனிற்காலம் அதாவது ஜுலை, ஆகஸ்ட் மாதங்களில் வெளியூர் பயணம் செய்யும் போது பாதுகாத்த கொட்டைகளை கவனமாக எடுத்துக் கொண்டு நெடுஞ்சாலையின் ஓரங்களில் அந்த கொட்டைகளை வீசிவிடுவார்கள். அந்த கொட்டைகள் செடியாக மரமாக சாலை ஓரங்களில் வளரும். இப்படி செய்ய சொன்னவர் தான் ஆசிரியர்.

சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த ரொட்டி வியாபாரி ஒருவர் வியபார நிமித்தமாக தினமும் பயணம் செய்யும் போது சாலையோரங்களில் பயன் தரும் மரவிதைகளை தூவிச்செல்வார். நான்கு வழிச்சாலைகளுக்காகவும், நகர்புற விரிவாக்கத்திற் காகவும் ஏற்கனவே லட்சக்கணக்கான மரங்களை வெட்டி விட்டதால் தமிழகம் வறட்சியில் சிக்கி தவிக்கின்றது. நிழலின் அருமை வெயிலில் தான் தெரியும் என்பார்கள். அது போல நாம் மரங்களின் அருமையை தற்போது தான் உணர ஆரம்பித்துள்ளோம். சமூக ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்கள், சமூக அமைப்புகள் பல ஆங்காங்கே மரக்கன்றுகளை நட்டு வருகின்றன. இருப்பினும் மரம் நடுதலை மாநிலம் முழுவதும் பேரியக்கமாக செயல்படுத்தினால் தான் எதிர்காலத்தில் வறட்சியின் பிடியில் சிக்காமல் இருக்க முடியும். இந்த பணியை திரு.முல்லை வனம், விருகை, சென்னையை சேர்ந்த சமூக ஆர்வலர் தொடர்ந்து 10 ஆண்டுகளாக செய்து வருகின்றார். இது வரை ஒரு கோடி மரங்களை நட்டுள்ளார். அவரை பாராட்ட வார்த்தைகள் இல்லை.

மரங்களை வளர்ப்பதால் ஏற்படும் நன்மைகள் நமக்கு பல தெரியாது. சாலையோரங்களில் மரங்களை வளர்ப்பதால் வாகனங்களில் இருந்து வரம் கரிமில வாயுவை மரங்கள் உட்கொண்டு ஆக்சிஜனை வெளியிடும். மரங்களை வளர்ப்பதால் மழை தரும் மேகங்கள் மரங்கள் இருக்குமிடத்தில் நின்று மழை பொழியும். மரங்களை வளர்ப்பதால் நிழல் தரும், கனி தரும் பல வகையான மருந்துகள் நமக்கு கிடைக்கும் இவ்வளவு எண்ணற்ற பலன்களை நமக்கு தரும் மரங்களை வெட்டி நாம் பாலைவனத்தில் வாழ்வது போன்ற நிலையை நோக்கி நகர்கின்றோம்.

சிவகங்கை ரொட்டி வியாபாரி சுரேஷ் குமாரை போல பள்ளி ஆசிரியர் ராஜாவை போல நாமும் சமூகத்திற்கு பயன் தரும் வகையில் சுற்று சூழலை பாதுகாத்திட, இயற்கை வளங்களை காத்திட, ஏரி குளங்களை காத்திட நாம் நமது குழந்தைகளுக்கு கற்று தருவோம். நாமும் நம் நண்பர்கள், உறவினர்களுக்கு சொல்வோம். சுற்று சூழலை பாதுகாப்பதும், இயற்கை வளங்களை பாதுகாப்பதும் நமது கடமையாக செய் வோம். அரசாங்கம் செய்யாததை சமூக அக்கறையுடன் நாம் செய்வோம். அரசியல்வாதிகள் செய்யாததை நாம் நம் மக்களுக்காக செய்வோம். ஏனெனில் அரசாங்கத்திற்கு கருணையும், தொலை நோக்கு சிந்தனையும் கிடையாது. இருந்தால் விவசாயிகள் தற்கொலை தமிழகத்தில் நடக்குமா? விவசாயம் அழியுமா? சிந்திப்போம்... சமூக அக்கறையுடன் செயல்படுவோம்.

**- தி.ஜெயசங்கர்**



# நெருக்கடியில் இந்திய மாணவர் சமூகம்!

வளர்ந்த நாடுகளை ஒப்பிட்டு பார்க்கின்ற போது பொதுவாகவே இந்திய மாணவர் சமூகத்திற்கு, இளைஞர்களுக்கு அரசின் மூலம் கிடைக்க வேண்டிய பயன் எதுவும் கிடைக்காத காரணத்தினால் அவர்களின் வாழ்க்கை கேள்விக்குறியாகிறது. மாணவர்களின் எதிர்கால கல்வியும் கேள்விக்குறியாகிது. இளைஞர் சமூகத்தின் மூலம் மீட்டெடுக்க வேண்டிய மனித வளத்தை பெறமுடியாமல் போகின்றது. இந்திய மாணவர்களின், இளைஞர்களின் மனிதவளத்தை மேம்படுத்துவது தொடர்பாக எந்த தொலைநோக்கு திட்டமும் ஒன்றிய அரசுக்கு இல்லை! இதனால் உலக அரங்கில் தலைநிமிர்ந்து நிற்க வேண்டிய நாம் மிகவும் பின் தங்கி இருக்கின்றோம்.

கொரானா பெருந்தொற்று மார்ச் 2020-ல் துவங்கிய பிறகு அரசு பொதுமுடக்கம் அறிவித்த காரணத்தினால் 2020,2021 ஆகிய இரண்டு ஆண்டுகளில் மாணவர்களின் கல்வி அறிவு, சமூக அறிவு மேம்படுத்துவதில் தடைபட்டுள்ளது. குறிப்பாக இந்தியாவில் வறுமைக்கோட்டுக்கு கீழே வாழக்கூடிய 70 கோடி பிள்ளைகளின் படிப்பு முடங்கியது. வறுமையில் வாடும் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் உணவுக்காக பள்ளிகளை நம்பியுள்ளோர் எண்ணிக்கை 36.9 கோடி என்று அரசின் புள்ளி விவரங்கள் சொல்லுகின்றது. இந்த நிலையில் தான் ஒன்றிய அரசு ஒரே நாடு, ஒரே ரேசன் கார்டு, ஒரே மொழி என்று பொய்யான தத்துவத்தை இந்திய மக்களுக்கு போதிக்கிறது. பள்ளி, கல்லூரிகள், மாணவர்களின் அறிவுத் திறனை வெளிப்படுத்துவதற்கான பயிற்சி அறை. அவர்களிடம் உள்ள முழுத்திறமையை வெளியே கொண்டு வந்து நாட்டின் வளர்ச்சிக்காக பயன்படுத்த வேண்டிய அரசுகள் சுதந்திரம் அடைந்து 70 ஆண்டுகள் கடந்தும் செய்யாதது அட்சியாளர்களுடைய தொலைநோக்கு பார்வை யற்ற செயல்பாடாகும். உலகம் முழுவதுமுள்ள வளர்ந்த நாடுகளில் அடிப்படை யான கொள்கையே கல்வி மற்றும் சுகாதார கட்டமைப்பை பலமாக வைத்துக் கொள்வதும் தொடர்ந்து பாதுகாப்பது மாகும். இதை செய்யாத நாடுகள் வளர்ச்சி பாதைக்கு வரவே இயலாது என்பது தான் எதார்த்த உண்மையாக உள்ளது.

கொரானா பெருந்தொற்று உருவாக்கிய நெருக்கடி என்பது ஏற்கனவே உள்ள முதலாளித்துவ சமூகத்தில் சமநிலையற்ற சமூகம் நிலவி வருகிறது. இது மேலும் கல்வி, சமத்துவமின்மையை கூடுதலாகியுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. 143 நாடுகளில் 36.9 கோடி குழந்தைகள் உணவுக்காக பள்ளிகளை நம்பி உள்ளனர். பள்ளியைத் திறக்காதது குழந்தைகளின் பசியை அதிகரித்து ஊட்டச்சத்து குறைவையும் அதிகரித்துள்ளது. இது எதிர்வரும் ஆண்டுகளில் உடல்நல பிரச்சனைகளுக்கு வழி வகுக்கும் என்று உலக

சுகாதார அமைப்பு மதிப்பீடு செய்துள்ளது. இது இந்தியாவிற்கும் பொருந்தும் என்று ஆட்சி யாளர்கள் உணர வேண்டும்.

இந்தியாவில் வடக்கு, வடகிழக்கு மாநிலங் களான பீகார்,அஸ்ஸாம், மிசோரம், இமாச்சல பிரதேசம், உத்திரபிரதேசம், உத்திர காண்ட், நாகலாந்து, மணிப்பூர் போன்ற மாநிலங்களில் பள்ளி கல்வி இடைநிற்றல் என்பது 60 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது என்று அரசின் குறிப்பு தெரிவிக்கின்றது. கோவிட் காரணமாக இது மேலும் அதிகரித்துள்ளது. பள்ளி, கல்லூரிகளுக்கு செல்ல முடியாத நிலை அதிகமாகி உள்ளது. இது இளைஞர் சமுதாயத்தை கடுமையாக பாதிக்கும். ஐரோப்பா போன்ற வளர்ந்த நாடுகளிலும் இந்த நிலை இருக்கும் என்றாலும் அதை சமாளிக்கின்ற பொருளாதார வலிமையும், கல்வி, சுகாதார கட்டமைப்பும் அவர்களிடம் உள்ளது. இந்தியாவில் இந்த நிலை இல்லை என்பதே எதார்த்தமாகும். கொரானா பெருந்தொற்று காலத்தில் மத்திய மாநில அரசுகளுக்கு நிதி நெருக்கடி ஏற்பட்ட காரணத்தினால் அரசு ஊழியர்களின் சரண்டர் பஞ்சப்படியை நிறுத்தி அதிலிருந்து கிடைத்த பல்லாயிரம் கோடி ரூபாயை கோவிட் பெருந்தொற்றுக்கு செலவழித்தோம் என்று சொல்வது ஒரு புறம் நியாயம் என்றாலும் மறுபுறம் இந்திய பெரும் முதலாளிக்கு ஆண்டொன்றுக்கு நான்கரை இலட்சம் கோடி வரிச்சலுகை அளிப்பது என்பது அரசின் முரண்பாடான செயல்பாடாகும். பெருந்தொற்று காலத்தில் வரிச்சலுகைகளை அளிக்காமல் நிதிச்சுமையை சமாளிக்க செல்வந்தர்களிடம் கூடுதல் வரிகள் விதிப்பதற்கு பதிலாக வரிச்சலுகைகள் அளித்து வருவது முதலாளித்துவ கொள்கையின் அப்பட்டமான கோரமுகம். இது ஏழை, எளிய மக்களுக்கு எதிரான நிலையாகும்.

இந்திய இளைஞர்கள், மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இந்த சூழலில் அவர்களுக்கு தரமான கல்வியை உறுதி செய்வதும், கல்விக்கடன்கள் உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் அளிப்பதும் கல்வி, சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்துவதும் இன்றைய அவசிய தேவையாக உள்ளது. ஆனால் இந்தியா ஏற்றுக் கொண்டுள்ள முதலாளித்துவ கொள்கை, இவற்றை எல்லாம் செய்யுமா என்பது தான் நம்முன் உள்ள கேள்வி.

இந்திய சமூகமும் தமிழ்சமூகமும் 75 ஆண்டுகால சுதந்திர இந்தியாவில் 75 சதவீதத் திற்கும் மேலான இந்திய மக்கள் வறுமையில் வாடி வருவது என்பதும் பெரும்பகுதி மாணவர்களுக்கு உயர்கல்வி கிடைக்காதது என்பதும் இந்தியா ஆங்கிலேயர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற உண்மையான காரணத்தை உணர்த்துவதாக இல்லை. கல்வி கேட்டும், வேலை கேட்டும், வறுமை ஒழித்திடக் கோரியும் போராட்டத்தை இளைஞர்கள் நடத்திட வேண்டிய காலம் தற்போது வந்துள்ளதாகவே நாம் உணர முடிகிறது.

“முதலாளித்துவத்திற்கு மாற்று தேட
வேண்டியுள்ளது. ”
தேடலை துவங்க வேண்டியவர்கள்
மாணவர்களும், இளைஞர்களும்,
தேடலின் முடிவு சோசலிச சித்தாந்தமாகவே
இருக்கும் என்று நம்புவோம்.

**- தி.ஜெயசங்கர்**




டெல்லியில் போராடும்
விவசாய தொழிலாளர்களுக்கு
ஆதரவாக திருவண்ணாமலை
செய்யார் கோட்டத்தில்
27.09.2021 அன்று
அனைத்து தொழிற் சங்கம்
சார்பில் மறியல்

# சீறும் சிறுத்தையாய் கம்யூனிசம்...!




உலகம் முழுவதும் மதஅடிப்படையிலான தத்துவ விவாதங்கள், அரசியல், தத்துவ விவாதங்கள் காலந்தோறும் நடந்து கொண்டு வருகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக ஆசியாவில் புத்தர் பிறந்து புத்தமதத்தை துவக்கி உலகம் முழுவதும் கொண்டு சென்றார். ஆசையே அனைத்துக்கும் காரணம் என்ற மெய்ஞானத்தை உணர்த்தி மக்களை துன்பச்சிறையிலிருந்து விடுவிக்க முயன்றார். அதே போல ஐரோப்பாவில் இயேசு கிறிஸ்தும், பாரசீகத்தில் முகம்மது நபிகளும், அதே போல இந்தியாவில் வைணவ, சைவ, சமயங்கள் தோன்றி மக்களால் பின்பற்றப்பட்டு வளர்ச்சியும், வீழ்ச்சியும் அடைந்தன.

அதே போல அரசியல் கலாச்சாரம் பண்டைக்காலம் தொட்டே ஒவ்வொரு நாடுகளின் பண்பாட்டுக்கேற்ப வளர்ச்சிஅடைந்து வந்தது. அதே நேரம் பொருளாதாரம் என்ற முறையில் உலகம் முழுக்க ஒரே தன்மை கொண்டதாக இருந்தது. பண்ணை அடிமை சமூகம், நிலபுரப்புத்துவ சமூகம், முதலாளித்துவ சமூகம் என்று இந்த முதலாளித்துவ பொருளாதார கட்டமைப்பு என்பது உலகம் முழுவதும் ஒரே மாதிரியான தோற்றத்தை கொண்டிருந்தது. முதலாளித்தும் என்ற வார்த்தைக்குப் பின்னால் பெரும் நில உடமையாளர்கள் + லாபம் என்ற இரண்டு வார்த்தைகள் ஒளிந்திருந்தது. மக்கள் பண்ணையிலும், தொழிற்சாலையிலும் 16 மணி நேரங்களுக்கு மேல் உழைத்தனர். அவர்களது உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை. மக்கள் சுரண்டடப்படுவதும், சித்தரவதைக்கு ஆளாக்கப்படுவதும், தொடர்கதையாக இருந்தது. மன்னராட்சிக்கு எதிராக பிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவின் பல இடங்களில் மக்கள் எதிர்த்து போராட துவங்கினர். இந்த போராட்ட காலத்தின் இடையே காரல்மார்க்ஸ் என்ற ஜெர்மானியர் 05.05.1818 ஆம் ஆண்டு பிறந்தார்.

முதலாளித்துவத்தின் கொடுமையை கண்ட முற்போக்கு சிந்தனையாளர்கள் அவ்வப்போது மக்களை திரட்டி முதலாளித்துவத்திற்கு எதிராக, நிலபிரபுக்களுக்கு எதிராக போராட்டங்களை நடத்தி வந்தனர். ஆனால் முதலாளித்துவத்தின் ஆணிவேரை பற்றியோ, முதலாளித்துவத்தின் வலிமை பற்றியோ புரிதல் இல்லாமல் அப்போதைய பொருளாதார அறிஞர்கள், தத்துவ கோட்பாடுகளை கொண்டவர்களாக இருந்தனர். அவர்கள் மத்தியில் காரல்மார்க்சின் தெளிவான தத்துவபூர்வமான பொருளியல் ரீதியான கட்டுரைகள் ஐரோப்பா முழுவதும் பேசும் பொருளாக மாறியது. தொழிலாளிகள் துன்பப்படுவதையும், தொழிலாளர்கள் ஒன்று சேர வேண்டிய அவசியத்தையும் தொழிலாளிகள் முதலாளிகளுக்கு எதிராக ஒன்று சேர்ந்து போராட வேண்டியதை அவ்வப் பொழுது கட்டுரைகள் வழியாக எழுதி வந்தனர். இதன் விளைவாக மன்னர்கள், அவரை நாடு கடத்தினர். தொடர்ந்து தொழிலாளிகளின் உழைப்பையும், முதலாளிகளின் சுரண்டலையும் சிந்தித்து தத்துவரீதியாக இணைத்து மூலதனம் என்ற பொக்கிஷத்தை இந்த உலகத்திற்கு அளித்தார்.

தொழிலாளிகளின் உழைப்பு சக்தி இல்லாமல் எதுவும் உருவாகாது என்று கோட்பாட்டியியல் மூலமாக நிரூபித்தார். மார்க்ஸ் எழுதிய பல்வேறு புத்தகங்கள் ஐரோப்பாவை புரட்டி போட்டது. உலகம் முழுவதுமுள்ள பல்வேறு மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது. மார்க்ஸ் கண்டு பிடித்த முதலாளித்துவம் என்பது தொழிலாளி வர்க்கத்தினால் தூக்கி எறியப்பட்டு தொழிலாளி வர்க்க சோசலிச அரசு அமையும் என்று உறுதிபட கூறினார். இதன் காரணமாக உலகம் முழுவதும் முதலாளித்துவத்திற்கு மாற்றாக சோசலிச, கம்யூனிச சித்தாந்தம் உருவாக்கப்பட்டது. உலகம் முழுவதும் இது காட்டுத்தீயாய் பரவியது. இந்த தத்துவத்தை உள்வாங்கிக் கொண்ட ரஷ்ய நாட்டைச்சார்ந்த மக்களிடையே சோசலிச சித்தாந் தத்தை கொண்டு சென்று மாற்றத்தை ஏற்படுத்தினார். விளாதிமீர் இல்யீச் லெனின் எனும் புரட்சியாளர்.

மன்னராட்சிக்கு முடிவு கட்டி நவம்பர் மாதம்1917-ம் ஆண்டு தொழிலாளி விவசாயிகளை இணைத்து புரட்சி செய்து ஜார் மன்னனை ஆட்சி கட்டிலில் இருந்து தூக்கி எறிந்தார்கள் ரஷ்ய மக்கள். இந்த புரட்சிக்குப் பிறகு உலகம் முழுவதும் ஆங்கிலேய ஆட்சிக்கெதிராக, மன்னராட்சிக் கெதிராக கலகங்கள் வெடித்தது. இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் இட்லரை தோற்கடித்து சோசலிச செஞ்சேனை நேசப்படைகளின் வெற்றிக்கு பேருதவி செய்தது. இரண்டாம் உலகப்போருக்கு பிறகு வடகொரியா, கிழக்கு ஜெர்மனி, போலந்து போன்ற ஆசியாவின் பெரும் பகுதி நாடுகள் ரஷ்யாவின் சோசலியப் பாதையை ஏற்றுக்கொண்டு சோசலிச அரசை நிறுவியது. அதன் பிறகு சீனாவில் மா.சே.துங் தலைமையில் புரட்சி நடத்திய சீனா சோசலிச நாடாகவும், கியூபாவில் பிடல்காஸ்ட்ரோ, சேகுவாரா தலைமையில் சோசலிச அரசு நிறுவப்பட்டது. அதே போல பெரு,வியட்நாம், செக்கோலாஸ்வியா, சோசலிச பாதைக்கு திரும்பியது. உலகம் முழுவதும் முதலாளித்துவத்தை ஆதரிக்கின்ற நாடுகள் ஒரு பிரிவாகவும், கம்யூனியத்தை ஆதரிக்க நாடுகள் மற்றொரு பகுதியாகவும், இரு துருவ அரசாக உலகம் மாற்றப்பட்டது.

1917 ரஷ்யப் புரட்சிக்கு பிறகு ரஷ்யாவில் ஏற்பட்ட எண்ணற்ற மாற்றங்கள் உலக அரங்கில் செல்வாக்கு செலுத்தியது. குறிப்பாக இன்று நாம் அனுபவித்து வரும் 8மணி நேர வேலை, பெண்களுக்கும் சம ஊதியம்,வாக்குரிமை, போனஸ், பேறுகால விடுப்பு, கூட்டுறவு, வங்கிகள், கூட்டுப்பண்ணைத் திட்டம், போன்ற எண்ணற்ற சமூக மாற்றுத்திட்டங்களை லெனின் கொண்டு வந்து உலக மக்களின் கவனத்தை அழுத்தமாக ஈர்த்தார். அதிலும் குறிப்பாக செல்வந்தர்களிடம் உள்ள நிலங்களை நிலமில்லாத ஏழைகளுக்கு பிரித்து கொடுத்தார். அரசு வங்கியில் குறைந்த சதவீத வட்டி வழங்கி, விவசாயமும், விவசாய பொருள்களும் பெருகுவதற்கு காரணமாக இருந்தார். இந்த மாற்றங்கள் அனைத்தும் முதலாளித்துவம் என்ற தத்துவத்திற்கு எதிராக சோசலிசம், கம்யூனிசம் ஏற்படுத்திய மாற்றம் என்பதை உலகத்திற்கு சொன்னவர் ரஷ்ய புரட்சியாளர் லெனின் ஆவார்.

காரல்மார்க்ஸ் அவருடைய நண்பரான ஏங்கெல்ஸ் இருவரும் இணைந்து எழுதிய தத்துவம் அனைத்து நாடுகளுக்கும். பொதுவானது. நிலப்புரத்துவ முறையை ஒழித்துவிட்டு முதலாளித்துவம் வந்தது போல தொழிலாளி வர்க்கம் முதலாளித்துவத்தை ஒழித்துவிட்டு சோசலிச கம்யூனிச அரசை கட்டாயம் கொண்டு வரும் என்ற உண்மையை, தத்துவத்தை, உலக நியதியை புரிந்து கொள்ளாதவர்கள் கம்யூனிசத்தின் மிது வசை மொழிபாடுவதும், அழிக்க நினைப்பதும் முட்டாள் தனமானது. மேற்கு வங்கத்தில் நேந்று நடந்ததும், திரிபுராவில் இன்று நடப்பதும் கம்யூனிச தத்துவத்தை அழிப்பதாக, ஒழிப்பதாக நினைத்து கொண்டு அவர்கள் செய்யும் வன்முறை செயல்களால் அடாவடி நடவடிக்கைகளால் உலகம் அறிந்த கம்யூனிச தத்துவத்தை, இயக்க இயல் கோட்பாட்டை அழித்து விட முடியாது. ஏனெனில் கம்யூனிசம் என்பது மானுடம் வாழ்வதற்கான விஞ்ஞானப்படியான அனைவரும் ஏற்றுக்கொண்ட இயக்க இயல்கோட்பாடு. முதலாளித்துத்திற்கும், கம்யூனிசத்திற்கும் முட்டலும் மோதலும் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். சில சமயம் கம்யூனிசம் தற்காலிக பின்னடைவை அடையும், ஆனால் இறுதியில் கம்யூனிசம் வென்றே தீரும். இதை நன்றாக புரிந்து கொண்ட பாசிச, பாஜக, ஆர்.எஸ்.எஸ். கும்பல் தான் கம்யூனிசத்தை ஒழிப்பதாக நினைத்துக் கொண்டு கம்யூனிஸ்ட்டுகளையும், கம்யூனிச அலுவலகங் களையும் அடித்து நொறுக்குகிறது. இந்த வன்முறைகளால் கம்யூனிச சித்தாந்தம் என்றும் அழியாது. அது சீறும் சிறுத்தையாய் மேலும்

வேகங்கொண்டு எழும். அப்போது ஆட்சியாளர்கள், பாசிசவாதிகள், முதலாளிகள், பிற்போக்குவாதிகள் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போவது நிச்சயம் அப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஒரு புரட்சியை திரிபுரா மக்கள், இந்திய மக்கள் உறுதியாய் செய்வார்கள்.

கம்யூனிச சித்தாந்தத்தை கருத்தியல் ரீதியாக எதிர்க்க முடியாதவர்கள் வன்முறை மூலமாக எதிர்க்க முயல்வது என்பதானது அவர்களுடைய பலவீனத்தை காட்டுவதாக அமைகிறது. சித்தாந்த போராட்டங்கள் , சித்தாந்த விவாதங்கள் தவிர்க்க முடியாதவை. அதே நேரம் அது ஜனநாயகப் பூர்வமாக மக்களாக, மக்களின் உரையாடல் மூலமாக வெளிப்படுத்த வேண்டுமே தவிர ஆயுதங்களாலும் வன்முறைகளாலும் அல்ல. வன்முறை கலாச்சாரத்தை மக்கள் எப்பொழுதும் ஏற்றுக்கொண்டதில்லை. மக்கள் எப்போதும் அதற்கு எதிராகவே நிற்கின்றார்கள். வாக்களிக்கின்றார்கள் என்ற உண்மையை பாஜக, ஆர்.எஸ்.எஸ். பிற்போக்கு வாதிகள் விரைவில் உணர்வார்கள். மக்கள் எழுச்சியின் மூலம் அதை உணர்த்துவார்கள்.

திரிபுரா மக்களுக்கு தேவை, அமைதி, கல்வி, வேலை வாய்ப்பு, மற்றும் பாதுகாப்பு, இதை அளிக்கத் தவறிய அரசுகள் வாழ்ந்ததாக வரலாறுகள் இல்லை. கம்யூனிசம் என்ற விஞ்ஞானம் அழிந்ததாகவும் வரலாறு இல்லை. எப்பொழுதெல்லாம் மக்கள் கடுமையாக பாதிக்கப் படுகின்றார்களோ, ஒடுக்கப் படுகின்றார்களோ அவர்களுக்காக கம்யூனிஸ்ட்டுகள் போராடுவார்கள், தலைமை தாங்குவார்கள் பெற்றி பெறுவார்கள்.

**- தி.ஜெயசங்கர்**




## விருதுநகர் கிளை மாநாடு

2.10.2021 அன்று நடைபெற்றது மண்டலச் செயலாளர் பீர்முகமதுஷா மாநாட்டை துவக்கி வைத்து பேசுகிறார். மாநில செயலாளர் எஸ். வண்ணமுத்து வாழ்த்தி பேசினார். எஸ். உமாநாத் சிறப்புரை ஆற்றினார்.




## கரூர் கிளை மாநாடு

19.09.2021 அன்று நடைபெற்றது மாநில செயலாளர் எஸ். அகஸ்டின் மாநாட்டை துவக்கி வைத்தார். துணைப் பொதுச் செயலாளர் வீ. இளங்கோ, மாநில செயலாளர் எஸ். ராஜாராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

**புதிய நிர்வாகியாக**

தலைவர் / வி. சுப்ரமணியன்
செயலாளர்/ கே. தனபால்
பொருளாளர்/ ஏ. பெருமாள்
ஆகியோரை தேர்வு செய்தனர்





# மாற்றத்தை நம்மிடமிருந்து துவங்குவோம்..!

1995 ஆம் ஆண்டு வரை மின்சார வாரியத்தில் ஒரு பணியை செய்ய ஊழியர்கள் நுகர்வோரை சார்ந்திருக்க வேண்டிய கட்டாயமில்லை. ஏனெனில் மின் இணைப்பு வழங்குவதற்கான தேவையான தளவாட பொருட்கள், பணியாளர்களை அனைத்தும் தேவையான அளவிற்கு வழங்கப்பட்டது. 2000-ம் ஆண்டிற்கு பிறகு இந்த சூழ்நிலையில் மாற்றம் ஏற்படத் துவங்கியது. நகரமயமாதல், தொழில் வளர்ச்சி போன்ற காரணங்களால் மின் நுகர்வோர் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்தது. அந்த உயர்வுக்கு ஏற்ப பணியாளர்கள் இல்லை. வாரியம் நிதிச்சுமை என்ற காரணம் காட்டி தளவாடப் பொருட்கள் கொள்முதல் செய்வதில் சிக்கனத்தைக் காட்டியது. இதன் காரணமாக மின் நுகர்வோர்களுக்கு உடனடியாக மின்சாரம் கொடுப்பதும், தடையில்லாத மின்சாரத்தை அளிப்பதும் என்ற முக்கிய பணியில் நுகர்வோரின் புகாருக்கு காரணமாக நேரிடும், அதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்ற காரணத்தினால் அந்த வேலையை பொருட்கள் பற்றாக்குறை, பணியாளர் பற்றாக்குறை இருந்த போதும் அதை நுகர்வோரிடம் லஞ்சமாக பெற்று பணியை முடித்தனர். அந்த வகையில் லஞ்சம் பிரிவு அலுவலகத்திலிருந்து துவங்கி இன்று பல்வேறு இடங்களில் புறையோடியுள்ளது.

மின் வாரியத்தின் பணியை செய்வதற்கு நுகர்வோரிடம் லஞ்சமாக பணத்தையோ, பொருளையோ, உடல் உழைப்பையோ பெறுவது என்பது சட்டப்படி குற்றம் என்று தெரிந்திருந்தும் அந்த குற்றத்தை பொறியாளர் களும், தொழிலாளர்களும் இணைந்து கூட்டாக இன்று வரை செய்து வருவது பணி கலாச்சார சீர்கேடு மட்டுமல்ல. சமூக கலாச்சார சீர்கேடு ஆகும் என்பதை அவர்கள் உணராமலேயே செய்து வருகின்றனர். பொருட்கள் பற்றாக்குறை, பணியாளர் பற்றாக்குறை என்ற விஷயத்தில் முதலில் குரல் கொடுக்க வேண்டியவர்கள் பிரிவு பொறியாளர்கள் மற்றும் உபகோட்ட பொறியாளர் கள் தான். அவர்கள் தான் பிரச்சனையின் ஆழத்தை கோட்ட, மின்வட்ட, மண்டல நிர்வாகங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியவர்கள். ஆனால் அவர்கள் அந்த வாய்ப்பை பயன்படுத்தாமல், மேலதிகாரி களுக்கு பயந்து, பணிந்து, குனிந்து எப்படியாவது வேலையை முடிக்க வேண்டும் என்ற காரணத்தினால் மின் நுகர்வோரிடம் யாசகம் பெற்று பணியை முடிக்கிறார்கள். இதை அவர்கள் அவமான மாகவோ, மின்வாரியத்தின் தரத்தை குறைக்கின்ற விஷயமாகவோ இன்று வரை கருதவில்லை என்பது தான் வருத்தப்பட வேண்டிய செய்தியாக உள்ளது.

2003-ம் ஆண்டு மின்சார சட்டம் முன்மொழிந்த பிறகு அதில் உள்ள சட்டஷரத்துக்கள் மின் நுகர்வோருக்கு சாதகமாகவும், பொறியாளர்கள் பணியாளர் களுக்கு பாதகமாக இருந்தாலும் 1995-ம் ஆண்டு இருந்த பொறியாளர்களே பதவி உயர்வின் மூலமாக உயர்மட்ட பதவிகளில் இருப்பதனால் மின்

நுகர்வோர்களிடமிருந்து வரும் புகார்களை சமாளித்திட முடியும் என்ற நம்பிக்கையில் அல்லது கூட்டாளிகள் என்ற தத்துவத்தில் இன்று வரை லஞ்சம் என்ற பிசாசு அனைவரையும் ஆட்டிப்படைத்து அழிக்கப் படாமல் உள்ளது.

மின்சார வாரியத்தில் ஊழல் வழக்கில் சிக்கியவர்கள் ( DVAC ) 1998 முதல் 2020 -ம் ஆண்டு வரை 22 ஆண்டுகளில் சுமார் 370 பேர், இதில் பெரும்பான்மையானவர்கள் உதவி பொறியாளர்கள், முகவர்கள், வணிக ஆய்வாளர் மற்றும் வணிக உதவியாளர்கள். ஊழல் வழக்கில் சிக்கிய இவர்கள் பணியிடை நீக்கம் ( Suspend ) செய்யப்பட்டு பணியிடை நீக்க அலவன்ஸ் பெற்று வருகின்றார்கள். மேற்கண்ட லஞ்ச லாவண்ய நடவடிக்கைகளுக்கு நிர்வாகத்தின் நடவடிக் கையே காரணமாக உள்ளது.போதியஆட்களையும், தளவாடப் பொருட்களையும் வழங்காமல் வேலையை முடி, இல்லை யென்றால் இந்த இடத்திற்கு வேறு ஒருவர் வர தாயாராக இருக்கிறார்கள் என்று மேலாண்மை செய்யும் அதிகாரிகளே சொல்லும் அளவிற்கு மின்வாரியம் தனது நன்மதிப்பை இழந்து உள்ளது நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதிகாரிகளின் நிர்பந்தத்தின் காரணமாக நுகர்வோர்களிடம் யாசித்து செய்யும் பணிகள் இன்றும் தொடர்கிறது. அதே நேரம் அதிகார தோரணையோடு யாரும் நினைக்க முடியாத அளவிற்கு பலஆயிரங்களை பெறும் லஞ்சப்பணமும் இதற்கு காரணமா யிருக்கிறது. 2013-ம் ஆண்டு தலைமை பொறியாளர்/ தெற்கு மண்டல அலுவலகத்தின் உள்ளே, வாரிய தலைமை அலுவலக வாளகத்தின் உள்ளே தலைமை பொறியாளரை கைது செய்து அவர் பையில் ரூபாய் ஐந்து லட்சம் தொகையும் பிடிப்பட்டது. இது ஒரு சிறிய உதாரணம். எந்த நேரமும் லஞ்ச ஒழிப்புத்துறையால் பிடிபடுவோம் என்று தெரிந்தும் பலர் இதை தொடர்ந்து செய்து வருவது சமூக சீரழிவு பாதை என்பதாகவே நாம் கருத வேண்டியுள்ளது. மேற்கண்ட செயல்களால் தான் நுகர்வோர் மற்றும் பொது மக்கள் மின் ஊழியர் உள்ளிட்ட அரசு ஊழியர்களை மதிப்பது கிடையாது. அதனால் தான் மின்துறை உள்ளிட்ட பொதுத்துறைகளை பாதுகாக்கின்ற நமது போராட்டத்திற்கு மக்கள் ஆதரவை அளிக்க மறுப்பது மட்டும் மல்ல, தனியார் துறை வருவது நல்லது என நினைக்கின்றனர். இது நமது பணிக்கலாச்சாரத்தினால் உண்டான விளைவு என்பதை நாம் உணர வேண்டும்.

மின்சார வாரியத்தை கட்டிக்காப்பது என்பது சாதாரண விஷயமல்ல. தொழிற் சங்கங்கள் கடந்த காலங்களில் செய்த அளப்பரிய போராட்டங் களினாலும், பல நேர்மையான பொறியாளர் மற்றும் அதிகாரிகளினாலும் தான் மின்வாரியம் பாதுகாக்கப்பட்டுள்ளது. 2000-ம் ஆண்டிற்கு பிறகு மின்வாரியம், வங்கி உள்ளிட்ட பல பொதுத்துறை நிறுவனங்களில் ஊழியர்களின் மனநிலை நுகர்வோருக்கு, வாடிக்கையாளருக்கு எதிராக இருப்பதாக அரசு கருதியதால் ஒன்றிய அரசு ஒரு முழக்கத்தை முன் வைத்தது. அந்த முழக்கமானது “Consumer is our Boss” இந்த முழக்கம் பல நிறுவனங்களில் வெற்றிகரமாக அமலாக்கம் செய்யப்பட்டது. மின்வாரியத்தில் இதை சரியாக அமல்படுத்தாத காரணத்தினால் மேற்கண்ட நடவடிக்கைகள் இன்று வரை நீடித்து வருகிறது. லஞ்சத்திற்கு எதிராக ஊழல்களுக்கெதிராக நாம் குரல் கொடுக்காத வரை நமது நிறுவனத்தையும் பாதுகாக்க முடியாது, நம்மையும் பாதுகாத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் லஞ்சம் சமூகத்தை செல்லரிக்கின்ற போது சமூகத்தின் அங்கமாக இருக்கும் நாமும் அரிக்கப்படுவோம் என்ற நியதியை நாம் உணர வேண்டும்.

இன்று வாரியமும், அரசும் முன் வைக்கும் இரண்டு கோஷங்கள், ஒன்று ஊழியர்கள் மீது வரும் புகார்களில் சரிபாதி லஞ்சம் கேட்டதாக புகார். இரண்டாவது ஊழியர்களில் பலர் வேலை செய்வதில்லை. கணக்கீட்டு பிரிவில் இன்னும் மோசம் என்று வாரிய அதிகாரிகள் ஆதாரங்களோடு பேசுவதை நாம் தினம் காண முடிகின்றது. எனவே நம்மை வாழவைத்த நிறுவனத்தை காக்க வேண்டுமெனில் நாம் கண்ணியத்தோடும் கடமையுணர்வோடும் நேர்மையாக பணி செய்து மக்கள் மத்தியில் செல்வாக்கும், நன்மதிப்பும் பெற வேண்டியது இன்றைய தேவையாக உள்ளது.

**மாற்றத்தை நம்மிடமிருந்து துவங்குவோம்.**
**“மாற்றமே நிலையானது”**

**- தி.ஜெயசங்கர்**




இந்திய வரலாற்றில் தமிழகத்தை நீக்கி விட்டு அல்லது மறைத்து விட்டு முற்போக்கான எந்த வரலாற்றையும் எழுத முடியாது என்பது பலர் அறியாதது. தமிழர்களின் தொன்மையான கீழடி ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் ஆய்வு செய்து வரும் ஆய்வாளர்கள் திராவிட நாகரீகத்தை இன்னும் சொல்லப் போனால் உலகத்தின் மூத்தக்குடி எங்கிருந்து தோன்றியதெல்லாம் இன்னும் சிறிது காலத்தில் அகழ்வாராய்ச்சி பணி மூலம் நிரூபிக்க இருக்கிறது. இந்த வழியில் வந்த நாம் சற்றே பின்னோக்கி பார்க்க வேண்டியுள்ளது. குறிப்பாக 1920-ம் ஆண்டிற்கு பிறகு தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்களை எல்லாம் இன்று நினைவு கூறுவது தற்போது அனுபவித்து வரும் அனைத்தும் எங்கிருந்து தொடங்கியது என்பதை வெளிச்சம் போட்டுக்காட்டும். இந்த வகையில் தான் இந்த கட்டுரை தொடங்குகிறது.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பாக ஆங்கிலேய ஆட்சியின் கீழ் நடந்து வந்த மாநில அரசுகள் இந்தியா முழுவதும் இருந்தது. தமிழகத்திலும் இருந்தது. குறிப்பாக நில உடமையாளர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்த பொழுது (ஜமீன்தாரர் - பண்ணையார்) முற்போக்கு சக்திகள் தமிழக அரசில் ஆதிக்கம் செலுத்தின. பழமையான பழக்க வழக்கங்களுக்கு முடிவு கட்ட வேண்டுமென்று போராடின. 1921 -22-ம் ஆண்டுகளில் நீதிக்கட்சி ஆட்சியில் இருந்த பொழுது அரசுத்துறைகளில் முதன் முறையாக இடஒதுக்கீடு கொண்டு வரப்பட்டது. இது ஒரு முக்கியமான நடவடிக்கையாக தமிழகத்தில் மட்டுமல்ல, தென்னிந்தியா மட்டுமல்ல, இந்தியா முழுவதும் தமிழகத்தின் பால் ஈர்க்கப்பட்டது. அதாவது சமூக ரீதியில் காலம் காலமாக பின்னுக்கு தள்ளப்பட்ட மக்களை முன்னுக்கு கொண்டு வருவதற்கு இடஒதுக்கீடுமுறை அவசியம் என்ற கோட்பாட்டை இந்தியாவிற்கு முதன் முதலில் அறிமுகம் செய்தது தமிழகம். இதை மாராட்டியத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக போராடிய அம்பேத்கர் வரவேற்று பல்வேறு கூட்டங்களில் பேசியும், பத்திரிக்கையிலும் எழுதி வந்தார்.

இடஒதுக்கீட்டின் அடிப்படையில் சட்டம் தான் பிற்காலத்தில் பல்வேறு மாற்றங்களை செய்து இந்தியா முழுவதும் மத்திய அரசு நிறுவனங்களில், மாநில அரசு நிறுவனங்களில் இந்த கொள்கை அமலாக்கம் செய்யப்பட்டது. இதன் விளைவாக சமூகத்தில் பின் தங்கிய மக்கள் அரசின் வேலை வாய்புகளைப் பெற்று சமூகத்தில் நன் மதிப்போடு இன்று வாழ்ந்து வருகின்றனர்.நூறாண்டுகளை கடந்த இடஒதுக்கீட்டு கொள்கை காரணமாக பல கோடி பிற்படுத்தப்பட்ட மக்கள் இரண்டு தலை முறைகளுக்கு மேலாக அரசின் வேலை, கல்வி, மற்றும் அரசின் பல்வேறு நலதிட்டங்களில் இடதுக்கீடு முறை அமல்படுத்தப்பட்டு வருகிறது.

இடஒதுக்கீடு என்ற ஒன்று இல்லை என்று சொன்னால் தமிழகத்தில் இந்தியாவில் இருக்கக்கூடிய சமூகத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கக் கூடிய மக்களின் வாழ்க்கை என்பது காணல் நீராய் மாறிஇருக்கும். இடஒதுக்கீட்டின் மூலம் வளர்ந்தவர்கள் இன்று பொதுத்துறைகள் தனியாருக்கு போவதன் மூலமாக இடஒதுக்கீடு அழிக்கப்படும் என்ற ஆபத்தை உணராமல் இருப்பது விந்தையான செய்தியாக உள்ளது. இன்றைய இளைஞர்களும் நேற்றைய இளைஞர்களும் இடஒதுக்கீட்டை பாதுகாக்க வேண்டுமென்று சொன்னால் பொதுத்துறைகளை பாதுகாக்க அவர்கள் வீதியில் இறங்கவேண்டும். வீதியில் இறங்காமல் மோடி அரசின் மக்கள் விரோத கொள்கைகளை பின்னுக்கு தள்ள முடியாது என்ற உண்மையை உணர்ந்து நாம்

ஓரணியில் திரள வேண்டிய கட்டாயமுள்ளது.

பெண்கள் சட்டமன்ற உறுப்பினராவதற்கு தடையாக இருந்த ஆங்கிலேய அரசின் சட்டத்தை மாற்றி அவர்கள் சட்டமன்ற உறுப்பினராவதற்கான சட்டத்தை இயற்றியதும் தமிழகம் தான். இதற்கும் இந்தியாவின் முன்னோடி மாநிலமாக தமிழகம் விளங்கியது. பெண்கள் ஆட்சி பொறுப்பில் பங்கேற்று ஆண்களுக்கிணையாக சேவை செய்திட முடியும் என்று காட்டியதும் தமிழக பெண்கள் தான் என்பதை நினைவு கூற வேண்டும். அது மட்டுமல்ல. சமூகத்தில் மிகவும் மோசமான கலாச்சாரமாக இருந்த தேவதாசி முறை என்று அழைக்கப்பட்டு வந்த பெண்களை இழிப்படுத்தும் ஒரு பழக்கத்தை முற்றிலுமாக ஒழித்துக் கட்டியது தமிழகம் தான். இது போன்ற எண்ணற்ற விஷயங்களை நம்மால் சொல்ல முடியும். தமிழக மக்களுக்கு தமிழகத்திற்கு எப்பொழுதும் வீரபராம்பரியமுண்டு. முற்போக்கு செல்வாக்கும் உண்டு. இவற்றையெல்லாம் உணர்ந்த காரணத்தினாலேயே தமிழகத்தில் பல்வேறு மாற்றங்களை நூற்றாண்டுகளுக்கு முன்பே கொண்டு வரப்பட்டது. கொண்டு வரப்படாத பல சட்டங்கள் அன்று விதைக்கப்பட்ட முற்போக்கு சக்திகளின் விளைவாக பின்னர் அது சட்டங்களானது சாத்தியமானது.

மாநில உரிமைகளை வலுவாக பேசியது தமிழகம் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்ற கோட்பாட்டை முதன்முதலில் முழுங்கியவர் அறிஞர் அண்ணா. அவரின் முழுக்கத்தை ஏற்காத பல வட இந்திய தலைவர்கள் பின்னாளில் அவரின் பாதையில் கோரிக்கை முழுங்கினார்கள். அண்ணாவின் முழக்கமே இரஷ்ய புரட்சிக்கு பிறகு சோவியத் கூட்டாட்சி தத்துவத்தை அமல்படுத்திய மாமேதை லெனின் அவர்களின் கொள்கையை பின்பற்றிய வார்த்தைகள் தான் அண்ணா குறிப்பிட்ட மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, இது பலரும் அறியாத ஒன்று. 1920 களில் தந்தை பெரியார் பேசிய பேச்சுகளும், அண்ணாவின் மேடை பேச்சுக்களும் ரஷ்ய புரட்சியை சோசலிச தத்துவத்தை புகழ்ந்து பேசியதாக வரலாறுகள் பதிவு செய்கிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு தொழில் புரட்சியின் காரணமாக உலகளாவிய விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக ஏற்பட்ட மாற்றங்களில் ஒன்று தான் நில பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டு முதலாளித்துவம் நிறுவப்பட்டது. முதலாளித்துவத்தின் அடுத்த கட்ட வளர்ச்சியாக தொழிலாளி வர்க்கம் சோசலிசத்தை நிர்மானிப் பதற்கான உட்கூறுகள் அதிகம் இருப்பதற்கான காரணங்கள் தெளிவாக தெரிகிறது. ஏனெனில் தற்போது வளர்ந்த நாடுகள் அனைத்தும் முதலாளித்துவத்திலிருந்து கார்ப்பரேட் முதலாளித்துவத்தை நோக்கி வேகமாக செல்கின்றது. அவர்கள் அங்கு அப்படி செல்வதற்கு பல காரண காணிகள் குறிப்பாக பொருளாதார காரணிகள் ஏற்புடையதாக ஒருவேளை இருக்கலாம். ஆனால் இந்தியாவில் அது போல கார்ப்பரேட் முதலாளித்துவத்தை நோக்கி செல் வதற்காக ஒன்றிய அரசு எடுக்கும் நடவடிக்கைகள் **அதிலும் குறிப்பாக அனைத்து பொதுத்துறை களையும் தனியாருக்கு விடுவது என்ற கொள்கை முடிவு இந்திய தொழிலாளி வர்க்கத்தை வலுக் கட்டாயமாக நீண்ட நெடிய போராட்டத் திற்கு தள்ளுவதாகும். ஒன்றிய அரசின் இந்த சவாலை தொழிலாளி வர்க்கம் ஏற்றுக் கொண்டு போராட்டக்களத்திறகு தயாராகி விட்டது.**

தமிழகத்தினுடைய கடந்த கால வரலாறும் உலகத்தினுடைய கடந்த கால வரலாறும் ஒன்றை தெளிவாக உணர்த்துகிறது. முற்போக்கு சக்திகளின் கொள்கை தான் அரசின் கொள்கையாக மாறும். மக்கள் திரட்சி தான் யார் ஆட்சியில் அமர வேண்டும் என்று முடிவு செய்யும். ஊடகத்தின் உதவியால் பொய் மூட்டைகளை அவிழ்த்து விட்டு மக்களை தொடர்ந்து ஏமாற்ற முடியாது. மக்கள் தொடர்ந்து ஏமாந்ததாக வரலாறும் கிடையாது. இத்தாலி நாட்டின் முசோலியின் கொள்கை களையும், ஜெர்மன் நாட்டு இட்லரின் நடைமுறைகளையும் பின்பற்றி வரும் ஒன்றிய அரசு அதை இயக்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு என்பதை மக்கள் நன்கு உணர்ந்து கொண்டார்கள் இந்துத்துவா கொள்கையை அமல்படுத்த துடிக்கும் மோடி அரசை அடுத்த தேர்தலில் மக்கள் துாக்கி எறிவார்கள் என்பது தெளிவு - அதற்கான நாட்களும் எண்ணப்பட்டு வருகின்றன.

இந்திய தேசத்தை காக்க பொதுத்துறையை காக்க சாமான்ய மக்களை காக்க மக்களே ஒன்றிணைவோம்.

நாம் அனனவரும் மக்களிடம் சொல்வோம்!
மக்களுக்கு சொல்வோம்!!
இந்திய தேசம்
விற்பனைக்கு அல்ல என்று!!!

**தி. ஜெய்சங்கர்**

# அப்பா
## தோழர்...



**“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுயும் தெய்வத்துள் வைப்பப் படும்”**

என்ற திருக்குறளிற்கு ஏற்ப மின்சார வாரிய ஊழியர்களின் இதயங்களில் தெய்வமாக வாழ்ந்து கொண்டிருப்பவர், எப்பொழுதும் தொழிலாளியின் உணர்வோடு, உயிரோடு கலந்து விட்டவர் தான் எங்கள் பாசத்திற்குரிய தோழர் எஸ்.பி.ஆர் அவர்கள்.

எனக்கும் தோழர் எஸ்.பி.ஆர் அவர்களுக்குமான பந்தம் என்பது தோழர் என்ற நிலை தாண்டி அப்பா மகள் உறவைப் போன்றது. சிறியவளாக சங்கத்தில் நுழையும் தருவாயில் தோழர் என்ற வார்த்தை கூட தெரியாது. சார் என்று தான் ஆரம்பத்தில் பேச ஆரம்பித்தேன், தோழர் எஸ்.பி.ஆர் அவர்கள் சார் என்று அழைக்க வேண்டாம் தோழர் என்று கூப்பிடு. நான் உனக்கு அப்பாவைப் போல என்று கூறியதோடு மட்டுமல்ல மகளைப் போலவே என்னை பாதுகாத்தார். பாசம் காட்டினார். பல விஷயங்களை கற்று கொடுத்தார் நீயும் என் மகளைப்போலத்தான் என்று பலமுறை கூறி இருக்கிறார்.

அப்பா தோழருடன் எனது பயணம் கிட்டத்தட்ட 25 ஆண்டுகள், ஒன்றுமே தெரியாமல் சங்க உறுப்பினராக வந்த நான் இன்று மாநில நிர்வாகியாக, மாநில அமைப்பாளராக வளர்ந்திருக்கிறேன் என்றால் என்னை அடையாளம் கண்டவர் அப்பா தோழர் தான்.

கடலூரில் 10 வது மாநில மாநாட்டில் முதல் முறையாக பிரதிநிதியாக கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்து.மேற்கு சென்னை சார்பாக விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட்டது. உணவு இடைவேளையில் தோழர் எஸ்.பி.ஆர் அவர்கள் என்னை அழைத்தார். என்ன படித்திருக்கிறாய் என்றார் பி.ஏ. என்றேன், என்ன பணி என்றார் கணக்கீட்டாளர் என்றேன். உடனே சொன்னார் உன்னை போன்ற பெண்கள் சங்கத்திற்கு வர வேண்டும், தொழிற்சங்க பணி செய்ய வேண்டும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் சங்க அலுவலகத்திற்கு வர வேண்டும் என்றார், நிறைய புத்தகம் படிக்க வேண்டும் என்று அறிவுரை கூறினார். நீ விவாதத்தில் நன்றாக பேசினம்மா என்று பாராட்டினார்.

நான்காவது நாள் மாநாடு முடிந்து புதிய நிர்வாகிகள் அறிவித்தார்கள், மாநில செயற்குழு உறுப்பினர்கள் பட்டியலில் எனது பெயரும் இருந்தது. பெண்கள் தொழிற்சங்க பணிக்கு வர வேண்டும் என்று மேடையில் மட்டும் பேசவில்லை. வர வாய்ப்பும் தந்தவர், வழி காட்டியவர் அன்றிலிருந்து மாநில செயற்குழு உறுப்பினர், மாநில நிர்வாகி என்று பயணம் தொடர்கிறது.

கூட்டங்களில் குறிப்பேதும் இல்லாமல் தங்குதடையின்றி பேசுவது கண்டு அசந்திருக்கின்றேன். தமிழழில் பேசும் எழுதும் அதே வேகத்தில் ஆங்கிலத்திலும் பேசுவதும், எழுவதும் கண்டு வியந்திருக்கிறேன்.

அவர் அறிக்கை சமர்ப்பிக்கும் அழகே அருமை தான். கம்பீரமான குரலோடு ஒவ்வொன்றாக நடைபெற்ற பணிகளை பட்டியலிடும் போது அனைத்து இயக்கங்களும் நம் கண் முன்னே வரும். அவர் ஒரு பல்கலை கழகம்

அவரிடம் நாங்கள் கற்றது ஏராளம்.

கூட்டங்களுக்காக வெளியூர் செல்லும் நேரங்களில் ஸ்டேசன் வருவதற்கு அரை மணி நேரத்திற்கு முன்பாக எழுந்து அமர்ந்து விடுவார். எல்லோரையும் எழுந்திருங்கள் என்று குரல் கொடுத்து விடுவார். விடியற்காலை 4 மணி, 5 மணிக்கெல்லாம் சுறுசுறுப்பாக எழுந்து விடுவார். எந்த கூட்டமாக இருந்தாலும் நேரத்தோடு செல்வார். நேரத்தை எதற்காக செலவிட வேண்டும், எப்படி கடைபிடிக்க வேண்டும் என்று கற்றுக்கொடுத்தவர்.

பல ஆயிரம் ஒப்பந்த ஊழியர்கள், பகுதிநேர ஊழியர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றியவர், 'எப்போது குரலை உயர்த்தி பேச வேண்டும் எங்கே மென்மையாக பேச வேண்டும் என்று இடம், பொருள், அறிந்து பேசும் வல்லமை கொண்டவர். தொழிலாளர் நலனுக்காக தன் குடும்பத்தை பிரிந்து தொழிற் சங்கத்தையே தன் குடும்பமாக எண்ணி, மின்வாரிய ஊழியர்களை குழந்தையாக பாவித்து மின்வாரிய தொழி லாளிகளுக்காகவே தன் வாழ்நாளை அர்ப்பணித்த சமரசமில்லா போராளி எங்கள் அப்பா தோழர்.

கூட்டங்களில் கருத்து முரண்பாடுகள் பலமுறை வந்ததுண்டு, ஆனாலும், கூட்டம் முடிந்தவுடன் நான் சொல்வதை அப்படியே எற்றுக்கொள்ள வேண்டியதில்லை. உனக்கு மாற்று கருத்து இருக்குமானால் தயக்கமில்லாமல் சொல்ல வேண்டும் அதுதான் வளர்ச்சிக்கு உதவும் என்று கருத்து சுதந்திரத்தை கற்றுக்கொடுத்த ஆசான் எங்கள் அப்பா தோழர்.

நேரில் பார்க்கும் பொழுதெல்லாம் குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள் என்ன படிக்கிறார்கள் என்று வாஞ்சையோடு பேசுவார். தோழர்களின் குடும்பம், உறுப்பினர்கள், பொருளாதார சூழ்நிலை என தெரிந்து வைத்திருப்பார். ஆச்சரியப்பட வைக்கும் பல அணுகுமுறைகள் கண்டு மகிழ்ந்திருக்கிறேன் அவர் போன்ற தலைவர்களுடன் சங்கப்பணி செய்வதற்கு கிடைத்த வாய்ப்பு பொக்கிசம் போன்றது என்றும் பத்திரமாய் பாதுகாப்பேன்.

EEFI, CITU பொறுப்புகளுக்கு தேர்ந் தெடுக்கப்பட்டவுடன் அலைபேசியில் அழைத்து பாராட்டி, வாழ்த்தி அகம் மகிழ்ந்த அப்பா தோழர், அவர் இல்லை என்பதை மனம் ஏற்க மறுக்கிறது. அவருடைய இழப்பு என்பது மத்திய அமைப் பிற்கும், மின்வாரிய தொழிலாளிக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

ஒருவருடைய பிறப்பு சம்பவமாகலாம் ஆனால் இறப்பு சரித்திரமாக வேண்டும் என்பார்கள். எங்கள் அப்பா தோழரின் இறப்பு சரித்திரம் படைத்திருக்கிறது. தமிழகம் முழுவதிலிமிருந்து சங்க வித்தியாமின்றி ஆயிரக்கணக்கான தோழர்கள் கோவைக்கு சென்று அஞ்சலி செலுத்தி இருக்கிறார்கள், அவர் குடும்பமும், கோவையும் மிரண்டு போகும் அளவிற்கு தோழர்கள் கண்ணீர் மல்க செலுத்திய இதய அஞ்சலி சரித்திரம் படைத்திருக்கிறது.

**நீங்கா நினைவுகளுடன் கண்ணீர் அஞ்சலி**
**என்றென்றும் நீங்கள் காட்டிய பாதையில்**
**பயணிப்போம்**
**செவ்வணக்கம் அப்பா தோழர்!**

- தஞ்சை தனலட்சுமி







# தொழிற்சங்கத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக திகழ்ந்தார் எஸ்.பஞ்சரத்னம் தலைவர்கள் புகழஞ்சலி....

தொழிற்சங்கத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக திகழ்ந்தார் எஸ்.பஞ்சரத்னம் என்று அனைத்து தொழிற்சங்க தலைவர்கள் அவருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மூத்த தலைவர் தோழர் எஸ்.பஞ்சரத்னம் படத் திறப்பு நிகழ்ச்சியும், புகழஞ்சலி கூட்டமும் சென்னை அண்ணா சாலையில் உள்ள மின்சார வாரிய தலைமை அலுவலக வளாகத்தில் செவ்வாயன்று (செப். 28) நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மின் ஊழியர் மத்திய அமைப்பின் மாநிலத் தலைவர் தி.ஜெய்சங்கர் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் பேசிய தலைவர்கள், தொழிலாளிக்கு பாதிப்பு என்றால் எந்த தொழிற்சங்கத்தை சார்ந்தவர் என்று பாராமல் குரல் கொடுத்தவர். தொழிலாளர்களை திரட்டுவதில் திறமையானவர். பேச்சுவார்த்தையின் போது மிகவும் சதுர்யமாக வாதங்களை முன் வைத்தவர். அதிகாரிகளுக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்தவர். ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்த பெருமை தோழர் எஸ்.பி.ஆரையே சேரும். ஒப்பந்த தொழிலாளர்களுக்கு கருணைத் தொகை பெற்றுத் தந்தவர். இடதுசாரி சித்தாந்த புத்தகங்களை வாங்கி பிறருக்கு கொடுத்து படிக்க வைப்பார். மின்வாரியத்தில் தொழிற்சங்க கூட்டமைப்பை உருவாக்கியவர். தொழிற்சங்கங்களை எப்படி நடத்த வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். தொழிற்சங்கத் தலைவர்களுக்கெல்லாம் தலைவராக திகழ்ந்தார். அனைத்து தொழிற்சங்க தலைவர்கள், தொழிலாளர்களின் நெஞ்சங்களில் அவர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். ஏற்றுக் கொண்ட கொள்கையில் இருந்து எதற்காகவும் சமரசம் செய்து கொள்ளாதவர். தனது இறுதி மூச்சு வரை தொழிலாளர்களுக்காக அவர் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். அவர் காட்டிய பாதையில் தொழிற்சங்க பணிகளை அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுப்போம் என்றனர்.

இதில் மத்திய அமைப்பின் பொதுச்செயலாளர் எஸ்.ராஜேந்திரன், எம்.தனசேகரன் (சம்மேளனம்), சந்திரசேகர் (ஏஇஎஸ்யு), மணிமாறன் (தொமுச), விஜயரங்கன் (அண்ணா தொழிற்சங்கம்), செல்வராஜ் (ஜனதா), சேவியர் (ஐஎன்டியுசி), சம்பத்குமார் (இன்ஜினியர் சங்கம்), ரவிச்சந்திரன் (என்எல்ஓ), எம்.சுப்பிரமணி (ஐக்கிய தொழிலாளர் சங்கம்), செந்தில் (இன்ஜினியர் கழகம்), அம்பிநாதன் (கார்டு பில்லிங் யூனியன்), சாமி ( Dr. அம்பேத்கர் எம்ப்ளாயீஸ் யூனியன்),சந்திரன் (பிஎம்எஸ்), ஏ.சேக்கிழார் (எம்ப்ளாயீஸ் பெடரேஷன்), கோவிந்தராஜ் (இன்ஜினியர் யூனியன்), அருட்செல்வன் (பொறியாளர் அமைப்பு), சுப்பிரமணி (அம்பேத்கர் பணியாளர் சங்கம்), ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினர்.

இதில் மாநிலப் பொருளாளர் எம். வெங்கடேசன், மாநில செயலாளர் கே.ரவிச்சந்திரன், தனலட்சுமி (உழைக்கும் பெண்கள் ஒருங்கிணைப்புக் குழு), மாநில துணைத் தலைவர் எம். சாலட், மண்டலச் செயலாளர்கள் எ. முருகானந்தம், ஆர்.ரவிக்குமார் கிளைச்செயலாளர்கள் எஸ்.கண்ணன், எஸ்.தசரதன், கே.வெங்கட்டைய்யா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


தோழர் பஞ்சரத்தினம் அவர்களுக்கு
தோழர்கள் – தலைவர்கள் – குடும்ப உறுப்பினர்கள்
அஞ்சலி
35

Registered with Registrar of News Paper for India TNTAM/2015/62075
Postal Registration No. TN/CH(C) 514/2021 - 2023
Licensed to Post without pre-payment No. TN/PMG(CCR)/WPP/528/2021 - 2023
Posted at Egmore RMS-1 (Patrika Channel) Date of Publishing First week of every month
Posted on 5 to 9 every month Date of Posting 12.10.2021

## தோழர் பஞ்சரத்தினம் அவர்களுக்கு தோழர்கள், தலைவர்கள் அஞ்சலி











Published by S.S.SUBRAMANIAN on behalf of Central Organisation of Tamil Nadu Electricity Employees
Published from No. 27, Mosque Street, Chepauk, Chennai-600 005. and Printed by N.SRINIVASAN
at Vaigai Printers and Publishers 2/38, Potters Street, East Jones Road, Saidapet, chennai - 600 015.
Editor S.S.Subramanian